
# தமிழர் தகவல்

Tamils' Information

ஆகஸ்ட் 2004
இலண்டன்



மாத சோதிடம்
உள்ளே!

மாதாந்திர செய்திச் சஞ்சிகை

A monthly information digest


THARANI JEWELLERY
54 Ealing Road, Wembley, Middlesex HA0 4TQ
Tel : 020 8902 7111, 020 8902 6777
நவநாகரீக தங்க நகைகளுக்கு
தாரணி ஜுவல்லரி
Vahizan Disc World
Get up to 10% off !!!
From our online shopping!!!
வாகீசன் டிஸ்க் வேள்ட்
எம்மிடம் மிகப் பழைய காலத்து படங்கள் தொடக்கம் இன்றுவரையுள்ள வீடியோ பிரதிகள், வீடியோ சீடிகள், டீவிடிகள் என்பன வாடகைக்கு அல்லது மிகக் குறைந்த விலையில் சில்லறையாகவோ அல்லது மொத்தமாகவோ விற்பனைக்குண்டு.
இவற்றைவிட சகலவிதமான பக்திப்பாடல்கள், கர்னாடகப் பாடல்கள், கர்னாடகவார்த்திய இசைகள் யாவும் MP3, AUDIO CD, CASSETTE ஆகியவற்றில் பெற்றுக்கொள்ளலாம்.
WE SELL TITLES FROM INRECO, GEETHANJALI, VEDU, RPG, AMUDAM AND FROM MANY OTHER FAMOUS COMPANIES !
Vahizan Disc World
52B Ealing Road, Wembley
Tel: 020 8902 8828
Email : Vahizan@aol.com
www.vahizan.com
Vmpv Video Ltd
537 High Road, Wembley
Tel:020 8902 5055
Email:Videovmpv@aol.com

# தமிழர் தகவல் Tamils' Information

ஆகஸ்ட் 2004 | மலர் : 02 | இதழ் : 14

" பெருமைக்கும் ஏனைச் சிறுமைக்கும் தத்தம்
கருமமே கட்டளைக் கல்." – குறள்

## மாற்றங்கள்

" இரண்டாயிரம் ஆண்டு இடைக்காலத்தில் மக்கள் தங்கள் சொந்தப் புத்தியை உபயோகிக்கும் உரிமையை முற்றிலும் இழந்திருந்தார்கள். ஏன் எதற்கு எப்படி என்ற கேள்விகளைக் கேட்கவே உரிமையில்லாதவராய் எழுதியதைப் படிப்பவர் சொல்லியபடி கேட்டனர். சிந்தித்தால், தர்க்கித்தால், சந்தேகித்தால் பாவம் என்று கூறி அழுத்தி வைக்கப்பட்டிருந்தார்கள். எனவேதான் அறிவு வளரவில்லை ! சமுதாயமும் மேலோங்கவில்லை " இப்படி எழுதியவர் பெரியார் ஈ.வெ.ரா அவர்கள். ஐம்பது ஆண்டுகட்குமுன் ' குடியரசு ' பத்திரிகையில் அவர் எழுதியவை. அரை நூற்றாண்டு கழிந்துவிட்ட பின்னும் கூட நமது சமூகத்தில் மாற்றம் என்பது பெரியார் எதிர்பார்த்தபடி நடந்தேறவில்லை. காலத்துக்குக் காலம் தமிழினத்தில் தோன்றிய அரசியல் அயோக்கியத் தனங்களும், இலக்கிய – சமூகவியல் புரட்டுகளும் இன்னும் மாற்றமடையாமல் தொடர்கின்றன.

1947 இல் நடந்தேறிய இந்திய – பாகிஸ்தானிய பிரசாவுரிமைச் சட்டம் இலங்கையில் உள்ள தமிழினத்தைக் கூறுபோட்டதென்பது மறுக்க முடியாத உண்மை. அது நன்றாக உணரப்பட்டமைதான் தமிழ் அரசுக் கட்சியின் தோற்றமும், அமரர் வன்னியசிங்கம் போன்ற அரசியல் மேதைகளின் வருகையும் என்பதை வரலாறு சொல்லிவைத்திருக்கிறது. வெறும் கொச்சை அரசியல் பேசப்பட்ட மேடைகளில் இலக்கியத்துடன் கலந்த அரசியல் பேச்சுகள் நமக்கிடையே வந்தது வன்னியசிங்கம் அவர்களின் வரவின்பின்தான். அவர்தான் முதன் முதலில் மலைநாடு – மட்டக்களப்பு – யாழ்ப்பாணம் – வன்னி என்ற பேதங்களுக்கெதிராகவும் சாதியத்தின் கொடுமைகளுக்கெதிராகவும் குரல் கொடுத்தவர். அதன்படி உண்மையாக உழைத்தவர். அவர்தான் எதிர்காலத் தமிழனின் ஒற்றுமையை மேம்படுத்த மலைநாட்டுத் தமிழனை வன்னிக்குக் கொண்டு வந்தவர். கல்லோயாவிலும், கந்தளாயிலுமாக அரசுக்கெதிரான சுழற்சிப்பயணங்களை மேற்கொண்டிருந்தவர். அன்று மற்றைய தலைவர்களும் அதேயளவு உத்வேகத்துடன் செயற்பட்டிருந்தால் அந்தக் குடியேற்றங்கள் ஓரளவு குறைக்கப்பட்டிருக்கும் அல்லது தடுக்கப்பட்டிருக்கும். ஆனால் அப்போதும் கூட நாம் பிளவுபட்டுதான் இருந்தோம். எல்லாவற்றிலும் கட்சிக்கண்ணோட்டமும் – பதவிக் கவிழ்ப்புகளும் நம்மிடையே ஏற்பட்டிருந்தன. ஒற்றுமை பற்றிய முயற்சிகளின் போதெல்லாம் அவைகளைப் பட்டங்கள், பதவிகள் மூலம் சிங்களப் பேரினவாதம் முறியடித்துச் செயற்பட்டவிதம் இன்றைய தமிழினம் அறியாததன்று. காரணம் நம் ஒற்றுமையின்மையே. தமிழர்களின் துர்ப்பாக்கியம் நாற்பத்தேழு ஆண்டுகள் முடியுமுன் வன்னியசிங்கம் அவர்கள் நம்மிடமிருந்து விடைபெற்றதுதான். அவருக்குப் பின் வந்த அரசியல் தலைவர்கள் எவரும் அவரளவுக்குத் தூய்மையுடன் – துணிவுடன் செயற்பட்டதில்லை. அன்றைய வரலாற்றைப் புரிந்தவர்களுக்கும் வாழ்வை இழந்து நின்ற தமிழினத்துக்கும் இது புரியும்.

இன்று மீண்டும் ஒரு புதிய ஒளி. அது ஈழத் தமிழனின் ' தேசியத்தலைமை '. உலகத்தின் பார்வைகள் எல்லாம் ஈழத்தமிழனை நோக்கித் திரும்பியுள்ளமை ஒன்றும் பொய்யான கதையல்ல. தமிழினம் ஒரு தமிழ் தேசியத்துள் ஒன்றுபடாவிட்டால் விமோசனம் இல்லையென்பதை சாதாரண எமது மக்கள் உணர்ந்து வருகிறார்கள். எவ்வளவுதான் பிரதேசவாதம் பேசப்பட்டாலும் எத்தனை ' கருணாக் 'கள் தோன்றினாலும் அது வெற்றியளிக்கப் போவதில்லை.

மலையகத்தில் ஒரு புதிய விழிப்பு இப்போது களை கட்டிவருகிறது. பழைய தலைமைகளால் இனித் தடுத்து வைக்க முடியாதென்பதும் தெரிகிறது. பெரியசாமி சந்திரசேகரனும், மனோகணேசனும் தங்கள் பாதையைத் தவறாமல் சரியாகக் கடைப்பிடிப்பார்களானால் ஒரு புதிய விழிப்புணர்வும், வேகமும் கிடைக்கும். இலங்கையில் நடக்கும் எல்லாவற்றிற்கும் இலங்கைக்கு வெளியேயிருந்துதான்அறிவுறுத்தல்கள் பெற வேண்டிய பலவீனமான தலைமையை மலையகம் இன்று பெற்றிருப்பதுதான் சாபக்கேடாகவுள்ளது. எத்தனை நாளைக்கு இவர்கள் எடுப்பார் கைப்பிள்ளையாக இருக்கப் போகிறார்கள்?

ஆசிரியர்

***தமிழர்களே ! தமிழர்களுடன் தமிழில் பேசுங்கள்***

முகவரி :
41, HADDINGTON ROAD,
BROMLEY,
KENT BR1 5RG, U.K.

தொலைபேசி :
020 8480 3320

வெளியீடு :
திருமுருகன் அறிவகம்
இலண்டன்
Thirumurugan Arivagam
London

ஆசிரியர் :
அரவிந்தன்
Editor :
Aravindan

வங்கி :
H.S.B.C
A/C Name :
TAMILS' INFORMATION
SORT CODE : 40-35-30
A/C No.: 81437100

கணணி, அச்சுப்பதிப்பு :
தமிழர் தகவல்

Computering & Printing :
Thamizhar Thagaval

£ 6.00 தபாற் செலவை
மேற்படி வங்கியில்
செலுத்தின்
வருடம் முழுவதும்
" **தமிழர் தகவல்** "
உங்கள்
இல்லம்தேடி வரும்

**படைப்புகள் ஆக்கியோரின் உரிமைகளே**

**வாசகர்களே ! எமது விளம்பரதாரர்களை மனமுவந்து ஆதரியுங்கள் !**

### சவால்கள்

கடந்த காலம் பற்றிய நிறுவன ரீதியான ஞாபகம் இன்மையும் தற்போதய சமாதான முயற்சியில் அரசாங்கம் பக்கத்தில் ஒரு பலவீனமாக இருக்கிறது. ஆதலால் அரசாங்கம் கடந்த சமாதான முயற்சியில் பங்கு பற்றிய ஐ.தே.க யினரையும், ஏனைய நிபுணர்களையும் ஆலோசிக்கவேண்டும். இதன் மூலம் கடந்தகால அனுபவங்களிலிருந்து நல்லப் படிப்பிணையைப் பெற்றுக் கொள்ள முடியும். இங்கு விடுதலைப் புலிகளின் பக்கத்தைப் பார்க்கின்றபோது அவர்கள் பலமான நிலையிலேயே இருக்கிறார்கள். நிறுவன ரீதியான சிறந்த ஞாபகத்தை அவர்கள் கொண்டிருக்கிறார்கள். என்னதான் தடங்கல்கள், பிரச்சனைகள் இருந்தாலும் பேச்சுவார்த்தை சாத்தியமான அளவு விரைவாக ஆரம்பிக்கப்பட்டே ஆகவேண்டும். மேலும் மேலும் காலதாமதம் ஏற்பட ஏற்பட தீயசக்திகள் சமாதான முயற்சியை சீர்குலைப்பதற்கான வாய்ப்புகள் அதிகமாகக் காணப்படும்.

(பேட்டி: கலாநிதி குமார்ரூபசிங்க)

### கூட்டணியின் பாரிய பொறுப்பு:

'' தென்னிலங்கைத் தரப்பின் காய் நகர்த்தல்கள் எவ்வாறு ஒட்டு மொத்தமாகத் தமிழர் ஒருமைப்பாட்டை குலைக்கக்கூடும். வடக்கை விடுவோம் - கிழக்கிலேயே ஏற்படுத்தக்கூடும் என்பது பற்றி மக்களுக்கு வேண்டிய அரசியல் அறிவூட்டலைச் செய்வது, அவர்களது தலையாய கடமையல்லவா ? இவ்விவாதம் சூடு பிடித்தால் மட்டக்களப்பிலும் பார்க்க திருமலையும் அம்பாறையுமே பிரச்சனை மையங்களாக்கப் படும் என்ற அரசியல் பாலர் வகுப்பு உண்மை எமக்குத் தெரியாதா என்ன ? உண்மையில் இந்தக் குறிப்பு தனிப்பட்ட வகையில் எவருக்கும் எதிராகக் கூறப்படும் ஒன்றல்ல புதிய தமிழ்க் கட்சியொன்று தோற்றுவிக்கப்பட வேண்டுமென்பதன் அரசியல் சாணக்கியப் பின்புலம் தமிழ்த் தேசியக் கூட்டமைக்கு விளங்காதததா ? ''

( நன்றி பீவுமர், தினக்குரல்)

### பரீட்சையா ?

'' தமிழர் தரப்பானது இடைக்கால நிர்வாகம் சம்பந்தமான நிலைப்பாட்டைக் கைவிடக்கூடிய புற - அகச் சூழ்நிலையை அடையவேண்டும் என்பதற்கான சகல முயற்சிகளையும் சிங்களம் இனித் தொடர்ந்து வெளிப்படையாகப் பரீட்சிக்கும், தனது இம்முயற்சிகள் தோற்கும் பட்சத்தில் தமிழர் தரப்பு பேச்சு மேசையிலிருந்து தன்னிச்சையாக விலகும் முடிவை எடுக்கும் வகையிலான நிர்ப்பந்தங்களினை அது தமிழர் தரப்பின் மீது திணிக்கும். ஆனால் பலமான அத்திவாரத்தில் நின்றபடி, பேச்சு மேசைக்கு வந்த தமிழர் தரப்பானது தம்மைப் பலவீனப்படுத்த மேற்கொள்ளப்படும் இம்முயற்சிகளையே சிங்களத்தின் உண்மை முகத்தை வெளிக் கொணர பயன்படுத்தும் பக்குவத்தை எப்போதோ பெற்றுவிட்டது ''

(நன்றி: சுதர்மா, தினக்குரல்)

### பொச்சரிப்பு இப்படி

விடுதலைப்புலிகள் கொடுத்துள்ள இடைக்காலத் தீர்வு என்பதே தனிநாட்டிற்கான முன்னேற்பாடுதான். இந்தியக் கடற்படை லமாக, விடுதலைப்புலிகள் கொண்டு வரும் இராணுவத் தளபாடங்களை அறவே தடுத்து நிறுத்தப்பட வேண்டும். இலங்கை இராணுவத்துக்குப் போதிய பயிற்சிகளும், ஆயுதங்களும் தரவேண்டும். தேவைப் பட்டால் நேரிடையாக இந்திய விமானப் படை விமானங்கள் மூலம் கடற்புலிகள் மீது குண்டடெறிந்து அழிக்கவேண்டும். இலங்கையின் ஒற்றுமைக்கும், ஒருமைப் பாட்டிற்கும் ஊறுவிளைவிக்கக் கூடாது. தமிழீழம் என்பது ஒரு சரியான தீர்வு அல்ல. கொழும்பில் யாழ்ப்பாணத்தைக் காட்டிலும் அதிகத் தமிழர்கள் வசிக்கின்றனர். தமிழீழத்தினால் தோட்டத் தொழிலாளர்களுக்கு என்ன நன்மை .. !

( இந்தியாவும் இலங்கைப் பிரச்சனையும் என்ற கருத்தரங்கில் பேராசிரியர் சூரிய நாராயணன் பேசியது)

### கணினி நூலகம்

'' நூலகங்களில் எடுத்த நூல்களை எடுத்த இடத்தில் வைப்பதில்லை. இதனால் பிறகு தேடும்போது அந்த நூலைக் கண்டுபிடிக்க முடிவதில்லை. தவறான இடத்தில் வைக்கப்படும் நூல் காணாமல் போன நூலுக்குச் சமம் என்ற முதுமொழி ஏற்பட்டு உள்ளது. இதைத்தடுக்க வத்திகான் நூலகத்தில் கணினியைப் பயன் படுத்துகிறார்கள். ஒவ்வொரு நூலிலும் ஒரு சில்(சிப்ஸ்) பொருத்தப்பட்டிருக்கும். அந்த நூலைத் தவறான இடத்தில் வைத்தால் அது பீ... பீ... என ஓசை கொடுக்கும். உடனே அதை எடுத்துச் சரியான இடத்தில் வைக்கவேண்டும். இத்தகைய கணினி சில் பொருத்தப்பட்ட முதல் நூலகம் இதுதான். ''

(நன்றி : வாராந்தரி ராணி)

### மெட்டும் ட்யூனும்

'' மெட்டுகள் அல்லது ஆங்கிலத்திலே சொல்லப்படுகின்ற ட்யூன்கள் எல்லாம் இன்றைக்குப் பாட்டுக்குச் சிறப்பு அளிக்கின்றன என்று சொல்லுகிறார்கள். நான் ஏற்றுக் கொள்வதாக இல்லை. ட்யூனுக்கு, மெட்டுக்கு பாட்டு எழுதுவது திறமைதான்; தனித்திறமைதான், என்றாலும் கூட பாட்டுக்கு மெட்டுப் போடுவதிலே வருகின்ற சிறப்பு, மெட்டுக்குப் பாட்டு எழுதுவதிலே வருவதில்லை. மெட்டுக்குப் பாட்டு எழுதுவதிலே ஒரு திறமை உண்டு. ஆற்றல் தேவையென்பதை நான் மறுக்கவில்லை. ஆனால் வலிந்துதான் அந்தத்திறமையைப் பெற வேண்டும். ''

(நன்றி: முரசொலியில் கலைஞர்)

### அம்பலமாகும் நீதி

'' உதவி வழங்கும் நாடுகளின் நிதி உதவிகளைப் பெற்றுக் கொள்வதற்காக அரசாங்கம் சமாதானப் பேச்சு வார்த்தைகளில் நாட்டம் கொண்டிருப்பதாகப் பிரசாரங்களை மேற் கொண்டிருக்கும் அதேவேளை விடுதலைப் புலிகளைப் பலவீனர்களாகக் காட்டிக் கொள்வதற்கும், முக்கியமாக கிழக்கில் விடுதலைப் புலிகளைப் பலவீனப்படுத்துவதற்கும் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கே அரசாங்கம் பல்வேறு சதி நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகிறது. ''

(நன்றி: கரிகாலன், ஈழநாடு)

### இடைக்கால வரவு

'' விடுதலைப்புலிகளால் சமர்ப்பிக்கப் பட்டுள்ள இடைக்கால நிர்வாக வரைவினை வெளிநாட்டு அரசுகளுக்கு இலங்கை அரசு காட்டி புலிகளுக்கு எதிராகப் பிரசாரம் செய்ய முற்படுமாயின் புலிகள் வரைந்துள்ள அத் திட்டத்தையே ஏற்க வேண்டிய கட்டாயமொன்று உருவாகும். அதுதான் யதார்த்தம் ''

(பேட்டி: கலாநிதி விக்கிரமபாகு கருணாரத்ன)

### சொற்பொழிவு:

தற்போது நம்மிடையே நிலவி வரும் 'சொற்பொழிவு' எனும் அழகான தமிழ்ச் சொல்லை உருவாக்கியவர் திருநெல் வேலியைச் சேர்ந்த பால்வண்ண முதலியார் என்பவர். எப்படி மேடையில் பேசுவது என்பது பற்றி சொற்பொழிவாற்றுப்படை என்ற பெயரில் ஒரு நூல் இயற்றியுள்ளார்.

(நன்றி : மஞ்சரி. தெ. இராமன்)

### அரசியல் அத்தைமகள்

பத்துப் பன்னிரண்டு வயதில் அரசியல் பற்றிப் பேசலாமா ? என்று கலைஞர் மு. கருணாநிதியிடம் ஒரு கேள்வி வந்தது. அதற்கு அவர் சொன்ன பதில் '' அந்த வயதில் அரசியல் என்பது அத்தை மகளைப்போல. பேசலாம், பழகலாம், சுற்றலாம், ஆனால் தொட்டுவிடக்கூடாது. ''

(நன்றி: ராணி)

வெம்பிளி, ரூட்டிங்கில்

# GLOBAL

## EXCHANGE LTD

Money Transfer to Sri Lanka

## குளோபல்

**எக்சேஞ்ச் லிமிடெட்**

உலகத்தின் எப்பாகத்திற்கும்
பணம் அனுப்ப
நம்பிக்கையான நிறுவனம்

54, Ealing Road, Wembley
Middlesex HA0 4TQ
Tel : 020 8902 3366
108, Garrat Lane, Tooting
London SW 17 OLN

---

வோல்த்தம்ஸ்ரோவில்

# Shree Jewellers

வைரத்தாலிக்கொடிகள், சங்கிலிகள், காப்புகள்,
தோடுகள், மோதிரங்கள், நவரத்தினங்கள்,
நெக்லஸ்கள், மகரப்பதக்கங்கள்



## ஸ்ரீ ஜுவல்லர்

வாரத்தின்
ஏழு நாட்களும் கடை
திறந்திருக்கும்
சாத்திர விதிப்படி,
பொருத்தமான நவரத்தின
கற்கள் பதித்து மோதிரம், பென்ரன்,
தோடு செய்து தரப்படும்

110, Hoe Street,
Walthomstow,
London E17 4QS.
Tel : 020 8509 7588

---

வோல்த்தம்ஸ்ரோவில்



# KUMARANS

## குமரன்ஸ்

TEXTILES

136, Hoe Street Walthamstow
London E17 4QR
Tel : 020 8521 3444, 8530 3033
Fax : 020 8521 9444

---

ரூட்டிங்கில்

# Yhaal House

சுத்தம், சுவை, தரம் மிக்க இலங்கை, இந்திய உணவு வகைகளை
எந்நேரத்திலும் எவ்வளவு தேவையாயினும்
குறைந்த விலையில் குன்றாத
மனநிறைவுடன் பெற்றுக் கொள்ள
நீங்கள் நாடவேண்டிய ஒரே இடம்



1, London Road, Tooting
London SW17 9JP
Tel : 020 8767 8585

---

ரூட்டிங்கில் முதல் தமிழ்க்கடை

# Prime Food & Wine

News Papers & Magazines, Off Licence - Grocery
Asian & Sri Lankan Groceries - Fruits & Vegetables

மணங்கவரும்
மளிகைச்சாமான்கள்
மென்பானங்கள்,
மதுபான வகைகள்,
பழங்கள்,
மரக்கறி வகைகள்,



மீன், இறைச்சி என
எல்லாவற்றிற்கும்
குறைந்த விலையில்
நிறைந்த
சேவையைப் பெற
எம்மை நாடுங்கள்

118, Tooting High Street,
London SW 17 0RR Tel : 020 8682 3777

---

539 A

வெம்பிளியில்

# ANGLO ASIAN CASH & CARRY

ENGLISH - ASIAN & AFRO CARIBBEAN GROCERY
FROZEN FOOD - FRUIT & VEG

TEL 020 8900 0444 **அங்லோ ஏசியன் தமிழ்க்கடை** TEL 020 8900 966

**ANGLO ASIAN CASH & CARRY**
373, Church Lane
Kingsbury NW9 8JB
Tel : 020 8200 1555 Mob : 07956 425 707

**ANGLO ASIAN CASH & CARRY**
539, High Road , Wembley HA0 2DN
Tel : 020 8900 0444 Fax : 020 8900 9666
Mob : 07956 425 707 web :www.angloasiangroup.uk

## ANGLO ASIAN

LONDON-COLOMBO COLOMBO-LONDON

Those willing to send parcels from Colombo to London and from London to Colombo by Air or by Sea are requested to contact us for such services at reduced Rates

**ANGLO ASIAN MINI MART**
*513, High Road,*
*Wembley HA0 2DN*

Tel : 020 8900 2451 Fax : 020 8903 8202
Mob : 07956 425 707

**வியாபாரம் பெருக விளம்பரம் செய்க**

### நிலாவே !

நிலாவே ! நீயேன் தமிழர் நிலமிசை
உலாவருகின்றாய் ? ஓடிப் போய்விடு !
அடிமைச் சிறையின் இடையே அழுந்தி
துடியாய்த் தமிழன் துடித்து நலியும்
கண்ணீர் ஆற்றுக் காவிரி மண்ணில்
வெண்ணிலா உனக்கு விழல் உலா வேறா ?
போ ! போ ! நிலாவே ! போய் எங்கேனும்
வாழ்வுடை யோர்முன் வலம் வா ! இங்கே ....
ஒடிந்த தமிழன் உலர்ந்த தமிழன்
மடிந்து மடிந்து வாழும் தமிழன்
கண்ணில் நெருப்பு வார்க்காதே ....
மண்ணில் எங்கேனும் மறைந்து போ நிலாவே !

– கவிஞர் காசி ஆனந்தன்



### கும்மி

கும்மியடி பெண்ணே
கும்மியடி – குரு
நாதனைப் பாடிக்
கும்மியடி
இம்மை மறுமைக்கும்
எங்களை ஆட்கொண்ட
எழிலைப் பாடியே
கும்மியடி !

– யோகர் சுவாமிகள்

### நெஞ்சுரம்

தமிழினமே !
தமிழினமே ... தமிழினமே
உனக்கு மட்டும்தான்
உள்ளத்தில் உறுதியுண்டு
ஊர் ஊராக உதைபடுவதற்கு

– கவிஞர் மு. மேத்தா

### எதுவோ !


இந்தக் காட்டில்
எந்த மூங்கில்
புல்லாங்குழல் !

– அமுதபாரதி

### போலி !

காகிதப் பூக்களின் சிரிப்பு
நீதிக்கும் நடிப்பு...
சாலமன் வரும்வரை!

– நிர்மலா சுரேஷ்



### தமிழ்

செந்நெல் மாற்றிய சோறும் – பசுநெய்
தேக்கிய கறியின் வகையும்
தன்னிகர் தானியம் முதிரை – கட்டித்
தயிரொடு மிளகின் சாறும்
நன்மது ரஞ்செய் கிழங்கு – காணில்
நாவிலினித்திடும் அப்பம்
உன்னை வளர்ப்பன தமிழா ! – உயிரை
உணர்வை வளர்ப்பது தமிழே

– பாவேந்தர் பாரதிதாசன்



### நண்பர்கள்

கலிகால நண்பர்கள்
எல்லாம் புரூட்டஸ்கள்
புரூட்டஸ்களே ! எந்தக்
கேசியசின் கூலிகள் நீங்கள்
எங்கே இருக்கிறாய் என்
விசுவாசியான அன்டனியே !
இந்த சீஸர் மாண்டபின்தான்
பூமுகம் காட்டுவாயா

– முல்லை

### நட்புக்காலம்!

எல்லாவற்றிலும்
எனக்குப் பிடித்ததையே
நீ
தேர்ந்தெடுத்தாய்
உனக்குப் பிடித்ததையே
நான்
தேர்ந்தெடுத்தேன்
அதனால்தான்
நட்பு
நம்மைத் தேர்ந்தெடுத்திருக்கிறது !

– கவிஞர் அறிவுமதி

### மாதமிரு திருக்குறள் கற்போம் !

அறிவுடைமை



*" சென்ற விடத்தாற் செலவிடா தீதொரீஇ*
*நன்றின்பா லுய்ப்ப தறிவு "* (குறள் 422)

நமது ஐம்பொறிகளையும் மனம் போனபோக்கில் போகவிடாது தீயவற்றினின்றும் தடுத்து நீக்கி, நல்லவற்றில் செலுத்துவது அறிவாகும். ஐம்பொறிகளின் வழி ஓடுவது மனம். அதைத் தடுத்து நிறுத்தி நல்வழிப் பார்த்துச் செலுத்துவது அறிவு.

*" எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினு மப்பொருள்*
*மெய்ப்பொருள் காண்ப தறிவு "* (குறள் 423)

எந்தப்பொருளை யார் ஒருவர் சொல்லக்கேட்டாலும் அங்ஙனம் கேட்டபடியே கொள்ளாமல், அப்பொருளின் மெய்ம்மைத் தன்மையை ஆராய்ந்தறிவது அறிவாகும்.

இலண்டனில் புலம்பெயர்ந்து வாழும் ஈழத்தமிழினம் தமது மொழி, மத, கலை மேம்பாட்டிற்காக பலசுயமொழிக் கல்விக் கூடங்களை நடத்திவருகிறது. அவற்றுள் சிறப்புடன் பணியாற்றும் ஒரு பள்ளியான ஹெண்டன் தமிழ்ப் பாடசாலை ஆசிரிய – மாணவர்களின் தோற்றமே இது. 19.07.2004 அன்று வருடாந்திர ஒன்று கூடலும் பரிசளிப்பு விழாவும் மிகச் சிறப்பாக நடைபெற்றன. இசை நிகழ்ச்சிகளும், கலை நிகழ்ச்சியுமாக மண்டபமே நிரம்பி வழிந்தது. மேலும் சிறப்புற நாமும் வாழ்த்துகிறோம்.

– ஆசிரியர்

## "தமிழர் தகவல்"

எதிர்வரும் பொங்கல் நாளுக்குப் புதுப்பொலிவுடன் புறப்படவுள்ளது. வாசகர்களிடமிருந்து விடயதானங்களையும் மேலதிகத் தொடர்புகளையும் எதிர்பார்க்கிறோம். பல பக்கங்களை நிரப்பிச் சிறப்பியுங்கள்.

– ஆசிரியர்

### சிதம்பரம் ஒரு செய்தி

தமிழர் தகவல் ஜூன் இதழில் விளம்பரப் படுத்தப்பட்டிருந்ததன்படி சிதம்பரம் திருக்கோயில் கும்பாபிஷேகம் பற்றிய திட்டம், தற்போது இடைநிறுத்தப்பட்டுள்ளது என்பதை அன்பர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறோம். இவ்வாலயத்தின் நிர்வாகத்தர்களிடமிருந்து வந்த கோரிக்கையின்படி தற்போதைக்கு இந்நிகழ்வு தாமதப்படுத்தப்பட்டுள்ளது. உரிய நேரம் வரின் பின்பு அறிவிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறோம். இதற்கான ஒத்துழைப்பை வழங்க முன்வந்த அனைவருக்கும் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம். ஆலயத்தின் சுற்றாடல் திட்டங்கள் இப்போது நடைமுறைப்படுத்தப்படுவதால், தற்போது சாத்தியமில்லை

– சிவயோகம் அறக்கட்டளை


M.K. SRI & CO

*Solicitors & Administrators of Oaths*

**WE SPECIALISE IN**

- Crime
- Immigration
- Matrimonial
- Conveyancing
- State Benefits
- Traffic Offenses
- Advice & Assistance at Police Station

*Principal : M. K. Sritharan*

*Assistant Solicitors*
S. Ravindran
S. Sivasanthiran
V. Ratnam

*Trainee Solicitors*
Avtar Manku
Selvi Ravindran

LEGAL AID WORK UNDERTAKEN

*WE ARE FRANCHISED BY THE LEGAL SERVICES COMMISSION*

Tel : 020 8515 7000 ( 4 Lines )
Fax : 020 8515 7030
Fax : 020 8515 7031 ( For Conveyancing only )

2C, FAIRHOLME ROAD
( OFF STATION ROAD )
HARROW
MIDDLESEX HA1 2TN

DX : 4232 HARROW (1)
www.mksri.co.uk

தமிழர் தகவல் ஆசிரியருக்கு !

ஆரம்பமே அசத்தலப்பா ! !

கலைஞர், வை.கோ, நெடுமாறன், சுப.வீரபாண்டியன் என்று நால்வரின் முகங்களைப் பார்த்ததுமே மனதில் ஒரு பரபரப்புடன் பக்கங்களைப் புரட்டினேன்

எதைப்படிப்பது? எதைத்தவிர்ப்பது என்ற குழப்பம்!!! விளம்பரங்கள் கூட நன்றாகத்தான் இருக்கிறது.

(Island of Blood), புனிதனின் " இடிந்து வீழ்ந்த இந்துத்துவம் ", கோத்திரனின் "தகைமை" நன்று. கவிதைகள் அனைத்தும் அருமை

எஸ். மைக்கல்

திருமிகு ஆசிரியர் அவர்களுக்கு,

அன்புடையீர் வணக்கம்

1-6-2004 ' தமிழர் தகவல் ' படித்தோம். அதில் இடிந்து வீழ்ந்த இந்துத்துவத்திற்கு 23 காரணங்களைப் பட்டியல் இட்டமை நன்றாக உள்ளது. ஆனால் 24வது காரணமாக, கிட்டத்தட்ட 1200 ஆண்டுகளுக்கும் மேலாக மக்களால் பழனியில் வணங்கப்பட்டு வந்ததும், சித்தர் போகரால் செய்யப்பட்ட நவபாஷாண சிலையுமான, பழனி தண்டாயுதபாணி மூலவர் சிலையை இரவோடு இரவாக (25-01-2004) அகற்றிவிட்டு, புதிய ஐம்பொன் சிலையைத் தமிழக அரசு வைத்ததும் ஒரு முக்கிய காரணமாகுமே !

– மு. சுசீலா

அன்பான ஐயா

தமிழர் தகவல் மே இதழ் கிடைத்தது. முகப்பு A1. தமிழகத்தையும் தமிழீழத்தையும் அறிவால் அறிவை இணைத்த தங்களுக்கு தலை வணங்குகின்றேன்

ஆசிரியத் தலையங்கம் ஆழமானதாகவும், அர்த்தமுள்ளதாகவும், தீர்க்கதரிசனமுமாக அமைந்திருந்தது.

ஈழவேந்தனை ஈழத்தமிழர் ஏற்றுக் கொண்ட வேளை அவரைப்பற்றியும், அவர் கட்டுரையை சேர்த்தமையும் தமிழர் தகவலுக்கும் எமக்கும் பெருமையாகவுள்ளது.

சைவ மகாநாட்டின் பயன் என்ன? தூள் கிளப்பியுள்ளது. அடுத்த மகாநாடு நல்ல முறையில் அமைய நிச்சயமாக இக்கட்டுரை வழி அமைக்கும்.

காசி ஆனந்தன் கவிதைகள் பிரமாதம் பெருமை தமிழ் அன்னைக்குத்தான்

நீண்ட காலத்துக்குப் பின் தாமரைச் செல்வியின் உறவுகள் மகிழ்வைத் தந்தது.

ஈரத்தமிழ் இதயமெல்லாம் நனைத்து இனித்தது

உண்ணாநோன்பு தியாக தீபத்தை உயர்ந்த இடத்தில் ஏற்றியது.

கடைசிப்பக்கம் இதயத்தைத் தொட்டுக் கண்ணீரை வரவழைத்தது.

– P. விக்னேஸ்வரன்

அன்புள்ள ஆசிரியர் அரவிந்தன் அவர்கட்கு,

ஆனிமாத இதழை அலங்கரித்த அட்டைப்படத்தில், ஈழத் தமிழரின் உரிமைக்காக உயரக் குரல் கொடுக்கும் ஒப்பற்ற தலைவர்களை உரிய நேரத்தில் வெளியிட்டுள்ளது பாராட்டத்தக்கது. இதனால் தமிழர் தகவலின் உயரிய நோக்கம் தெளிவாகிறது. தங்களுடைய ஆசிரியத் தலையங்கத்தில் வெளிக் கொணர்ந்த ஆதங்கம் என் போன்ற வாசகர்களால் உணரப்படுகிறது. கடந்த ஓராண்டு கால வளர்ச்சியில், தமிழர் தகவல் நெடுந்தூரம் முன்னேறியுள்ளதை விடயம் தெரிந்தவர்கள் அறிவார்கள். தமிழ் நாட்டில் இருந்து வெளிவரும் ஜனரஞ்சகப் பத்திரிகைகள் பல ஆங்கிலச் சொற்களைத் தமிழில் சேர்த்து, தமிழ் படும்பாடு தாங்கள் அறிந்ததே. அத்தகைய ஒரு நிலை தமிழர் தகவலுக்கு வந்துவிடக் கூடாதென்பதே எமது ஆதங்கம்

– உமா மகாலிங்கம்

# LinkAIR
Travels Limited

ATOL PROTECTED 5047

IATA 91-2 5704 0

SriLankan

*Special Fares to : Colombo, Madras, Singapore, Canada*

**We can also arrange : COLOMBO - JAFFNA - COLOMBO**

361 London Road, Croydon, Surrey CRO 3PB
Tel : 020 8665 0206 Fax : 020 8669 8579

புதிய பொலிவுடன் லூசியத்தில்

# கற்பகம்
# Katpakam

**36, Loampit Hill, Lewisham**
**London SE 13 7SW**
**Tel / Fax : 020 8694 8810**

ஞாயிறு தோறும் உடன் பங்கு ஆட்டிறைச்சி

சகலவிதமான மரக்கறி வகைகள்
பழவகைகள் உட்பட சகல
தேவைகளுக்கும் நாடவேண்டிய
ஒரே இடம்

துரிதப் பணமாற்றுச் சேவை

ரஞ்சன் – இலண்டன்


## POLICE APPEAL FOR ASSISTANCE

If you have any information on people who may be involved in criminal gangs, violence, financial fraud, intimidation or other crime please phone the confidential Tamil hotline where you can leave a message in Tamil or English

## 0800 587 2935

*Alternatively please speak to your local police*

*Walking for a safer London*

# அவர் ஒரு பெரியவர்

## – தென்கச்சி சுவாமிநாதன்

ஒரு ரயில் போய்க்கிட்டிருக்கு. அதிலே ஒரு பெரியவர் பிரயாணம் பண்ணிக்கிட்டிருக்கார். எதிரிலே ஒரு பெரிய அதிகாரி – ஐ.ஏ.எஸ் ஆபிசர் – உட்கார்ந்திருந்தார். இரண்டு பேருக்கும் முன்னே பின்னே அறிமுகம் இல்லை.

ஏதோ ஒரு நகரத்திலே வண்டி நின்றது.

இரண்டு பேரும் கீழே இறங்கினாங்க.

பெரியவர் ஒரு ' டிரங்க் ' பெட்டியோட கீழே இறங்கினார்.

அந்த அதிகாரி கையிலே ஒரு சின்ன பெட்டி...

அவர் அந்தச் சின்னப் பெட்டியைக் கீழே வைச்சிட்டு, கூலி ! கூலி ! ன்னு கத்தினார்.

பெரியவர் பார்த்தார். '' ஐயா ! இந்தப் பெட்டி மட்டும்தானா? இல்லே ... இன்னும் ஏதாவது இருக்கா ? '' என்றார்.

'' இல்லீங்க – இதுமட்டும்தான் '' – னார் அவர்.

இதுக்கு என்னத்துக்குக் கூலி ஆள் ... நானே எடுத்துக்கிட்டு வாரேன் ... வாங்கன்னு சொல்லி அந்தப்பெட்டியைக் கையிலே எடுத்துக்கிட்டார்.

இரண்டு பேரும் பேசிக்கிட்டே நடந்து வர்றாங்க, பெரியவர் சொன்னார்;

'' இப்ப உள்ள நாகரிகம் எப்படி இருக்குன்னா... ''

'' சுமை கால் பணம், சுமை கூலி முக்கால் பணம் என்கிற மாதிரி இருக்கு. பணத்தை வீணாக்கிறதோடு இது கௌரவம்ன்னும் நினைக்கிறாங்க ... ! '' அப்படின்னார்.

அவர் சொல்றது சரிதான்

பத்து ரூபாய் மதிப்புள்ள ஒரு சுமையை 30 ரூபாய் கொடுத்துத் தூக்கிட்டுப்போவோம் நாமே அதைத் தூக்கினா நமக்குக் கௌரவக் குறைச்சல்ன்னு நினைப்போம். இதுதான் நம்ம நிலைமை. ஆனா அந்தப் பெரியவர் என்ன சொன்னார் தெரியுமா?

'' நீங்க எங்கே போகணுமோ அதுவரைக்கும் நானே இதை எடுத்துக்கிட்டு வர்ரேன் ''... ன்னார்.

அந்த அதிகாரி பக்கத்திலே உள்ள ஒரு ஓட்டல் வரைக்கும் போனார். பெரியவரும் அங்கே கொண்டுபோய்ப் பெட்டியை வச்சார்.

உடனே அந்த பெரிய அதிகாரி அவருக்குப் பணம் கொடுக்கறதுக்காகப் ' பர்சை ' எடுத்தார். உடனே இவர்

'' ஐயா! எனக்குக் கூலி எதுவும் வேணாம். உங்களுக்குச் சேவை செய்வது என் கடமை. நான் இந்த சேவையைச் செய்தது பணத்துக்காக அல்ல ... அன்புக்காக '' அப்படின்னு சொல்லிப்புட்டார்.

அதுக்கப்புறம் அவரு நன்றின்னார். இரண்டு பேரும் பிரிஞ்சிட்டாங்க. அன்றைக்குச் சாயந்திரம் அங்கே ஒரு கூட்டம் நடந்தது. அதிகாரி அந்தக் கூட்டத்துக்குப் போனார். மக்கள் கூட்டம் அதிகம். அந்த அதிகாரியும் ஓர் ஓரமா உட்கார்ந்துகிட்டார். முக்கிய விருந்தினர் பேசறதுக்காக வர்றார். மேடையிலேயே இருந்த பெரியவங்களெல்லாம் எழுந்திரிச்சி அவருக்கு மாலைபோட்டு மரியாதை செய்யறாங்க. அதைக் கவனித்த அதிகாரிக்கு ஆச்சரியம் – அதிர்ச்சி ! ஆமாம். அங்கே பேசவந்த முக்கிய விருந்தினர் வேறே யாருமில்லே ... இன்றைக்குக் காலையிலே இவர் பெட்டியைத் தூக்கிக்கிட்டு வந்த பெரியவர்தான்.

அந்தப் பெரியவர் யார்?

அவர்தான் ஈஸ்வர சந்திர வித்யாசாகர்

கூட்டம் முடிஞ்சுது. அதிகாரி அவரைத் தேடி ஓடினார். அவர் கைகளைப் பிடிச்சிகிட்டார். '' ஐயா என்னை மன்னிச்சிடுங்க '' ...ன்னார்.

அப்புறம் சொன்னார்.

'' அகங்காரம் என்கிற கெட்ட புத்திதான் உண்மையைக் கண்களிலேயிருந்து மறைக்குது. அதிகாரம்தான் மனிதனை அழிக்குது ! நீங்கள் மிகப் பெரிய மனிதர். இருந்தாலும் மனிதத் தன்மையுடன் நடந்துக்கறீங்க ! அன்பு – தயவு – பொறுமை இதெல்லாம் இல்லேன்னா மனிதனாக இருக்கறதுலே என்ன பிரயோஜனம் ? '' அப்படின்னு சொல்லிப்புட்டு அந்த அதிகாரி போனாராம்.

மனிதத் தன்மை –ன்னா என்ன? என்கிற கேள்விக்கு இந்தப் பெரியவர் ஒரு உதாரணம். இப்பல்லாம் அப்படியா இருக்கிறாங்க?

ஒரு பெரியவர் ஒரு பெட்டியைத் தூக்கிக்கிட்டு வந்துகிட்டிருந்தார். ஒரு இளைஞன் ஓடிவந்தான்.

'' குடுங்க சார் – நான் தூக்கிக்கிட்டு வர்ரேன் ! ''னான். குடுத்தார். வாங்கி தலையிலே வச்சிக்கிட்டான். அப்புறம் சொன்னான்

'' அடுத்தவங்க சிரமப்படக்கூடாதுங்கறது என்னுடைய கொள்கைங்க ''...ன்னான் '' அது நல்லதுதான் '' –ன்னார். கடைசியிலே பெட்டியைக் கொடுத்தான். வாங்கிக்கிட்டு பர்ஸைத் திறந்தார். பணம் கொடுக்க ! '' வேண்டாங்க ''ன்னான் '' ஏன் ? '' ...ன்னார்

'' உங்களுக்குச் சிரமம் கொடுக்கப்புடாதுங்கறதுக்காக வரும்போது நானே உங்க பர்ஸை எடுத்து வேணும்ங்கற பணத்தை எடுத்துக்கிட்டு திருப்பி உங்க பாக்கெட்லேயே போட்டுட்டேன் '' அப்படின்னான்.

# குறுகத் தரித்த குறள்

## சுப. வீரபாண்டியன்

நான் கல்லூரியில் ஆசிரியராக இருந்தபோது, ஒருநாள் திருக்குறள் நடத்திக் கொண்டிருந்தேன்.

'' ஒரு குறள், எந்தப் பால், எந்த இயல், எந்த அதிகாரத்தின் கீழ் வைக்கப்பட்டுள்ளது என்பதை நாம் கவனிக்க வேண்டும். அவற்றையொட்டியும், அக்குறளின் பொருளில் புதிய தெளிவுகள் நமக்கு ஏற்பட வாய்ப்புண்டு '' என்று கூறினேன்.

ஒரு மாணவர் எழுந்து, '' அது எப்படி? ஒரு குறள் இடம் மாறுவதால், அதன் பொருள் மாறிவிடுமா ? '' என்று கேட்டார்.

எந்த ஓர் இலக்கியக் கருத்தையும் எடுத்துக்காட்டுடன் விளக்குவதே மாணவர்களுக்குப் பயன் தரும் என்பதால், அந்த முயற்சியில் இறங்கினேன்.

'' சரி, ' பகுத்துண்டு பல்லுயிர் ஓம்புதல் நூலோர் தொகுத்தவற்றுள் எல்லாம் தலை ' என்னும் குறளுக்குப் பொருள் தெரியுமா ? '' என்று கேட்டேன்.

அக்குறளையும், அதற்கான பொருளையும் மாணவர்கள் பலர் அறிந்தே வைத்திருந்தனர்.

'' தம் உணவை, பசித்த உயிர்களுக்குப் பங்கிட்டுக் கொடுத்துத் தாமும் உண்ணலே, சான்றோர் வகுத்தளித்துள்ள அறங்கள் அனைத்திலும் சிறந்தது '' என்னும் கருத்துப்படச் சிலர் பொருளுரைத்தனர்.

அடுத்த வினாவைக் கேட்டேன். '' இந்தக் குறள் எந்தப் பாலில், எந்த இயலில், எந்த அதிகாரத்தின் கீழ் உள்ளது ? ''

வகுப்பு அமைதியானது.

ஒரு மாணவர் எழுந்து '' அறத்துப் பால் '' என்று சரியான விடையைக் கூறினார்.

ஆனால், எந்த இயல் என்பதும், எந்த அதிகாரம் என்பதும் யாருக்கும் தெரியவில்லை.

'' சரி, எந்த இயல் என்பதைப் பிறகு பார்த்துக் கொள்ளலாம். எந்த அதிகாரத்தில் இருக்கக்கூடும் என்பதை ஊகம் செய்து சொல்லுங்கள் '' என்றேன்.

சிறு அமைதிக்குப் பின்பு, '' விருந்தோம்பல் '', '' இல்வாழ்க்கை '', '' அன்புடைமை '', '' அருளுடைமை '' என்று ஆளாளுக்கு ஓர் அதிகாரத்தின் பெயரைச் சொல்லத் தொடங்கினார்கள்.

எதுவுமே சரியான விடை இல்லை.

'' நல்லது, இன்று வீட்டுக்குப் போய்த் திருக்குறள் நூலை எடுத்துப் பாருங்கள். நாளை வகுப்பில், சரியான விடையைச் சொன்னால் போதும் '' என்று கூறிவிட்டு, அடுத்த குறளுக்கு நகர்ந்தேன்.

மாணவர் சிலரிடம், ஒரு ' நமுட்டுச் ' சிரிப்புத் தென்பட்டது. உடனே அதற்கான பொருளும் எனக்கு விளங்கிவிட்டது. ' வீட்டில் எங்கே திருக்குறள் இருக்கிறது ? ' என்பதுதான் அந்தச் சிரிப்புக்கான காரணம்.

தமிழர்கள் பலருடைய வீடுகளில் திருக்குறள் நூல் இருப்பதில்லை. அதை நாம் அவமானமாகக் கருதுவதுமில்லை.

'' வீட்டில் குறள் இல்லையென்றால், நூலகம் சென்றாவது பார்த்து வாருங்கள் '' என்றேன்.

நாற்பது மாணவர்களில், நான்கைந்து பேராவது, திருக்குறளைத் தேடுவார்கள் என்பது என் நம்பிக்கை.

அடுத்த நாள் வகுப்பில், பத்துக்கும் மேற்பட்ட மாணவர்கள் எழுந்து விடை சொன்னார்கள்.

'' துறவறவியலில், கொல்லாமை என்னும் அதிகாரத்தின் கீழ் அக்குறள் உள்ளது '' என்றனர்.

விடை சொன்ன மாணவர்கள் அடுத்த நொடியே ஒரு வினாவையும் எழுப்பினர். '' அந்தக் குறள் ஏன் கொல்லாமை அதிகாரத்தில் வைக்கப்பட்டுள்ளது ? பகுத்துண்டு பல்லுயிர் ஓம்புதலுக்கும், கொல்லாமைக்கும் என்ன தொடர்பு ? '' என்று கேள்விகளை அடுக்கினர்.

நெடுநாள்களுக்கு முன்பு, அந்தக் குறளை அந்த அதிகாரத்தின் கீழ்க் கண்டபோது எனக்கும் அதே விதமான அதிர்ச்சிதான் எழுந்தது. பல்வேறு உரைகளை எடுத்துப் படித்தேன். உரிய விளக்கம் கிடைக்கவில்லை.

பரிமேலழகர் உரை, '' உண்பதனை, பசித்த உயிர்கட்குப் பகுத்துக் கொடுத்து உண்டு, ஐவகை உயிர்களையும் ஓம்புதல், அற நூலுடையார் துறந்தார்க்குத் தொகுத்த அறங்கள் எல்லாவற்றிலும் தலையாய அறம் '' என்று பொருளுரை கூறியது.

அக்குறளில், எந்த ஓர் இடத்திலும் 'துறவு' பற்றிய குறிப்பு ஏதுமில்லையெனினும், துறவறவியலில் அது இடம்பெற்றுள்ள காரணத்தால்தான், ''துறந்தார்க்குத் தொகுத்த அறங்கள் எல்லாவற்றிலும்'' என்று பரிமேலழகர் உரை தருகிறார் என்று புரிந்தது.

ஆனாலும், ' கொல்லாமை ' அதிகாரத்தின் கீழ் அக்குறள் வைக்கப்பட்டமைக்கான காரணம் விளங்கவில்லை.

மற்ற உரைகளிலும், குறளுக்கான பொருள் விளக்கப்பட்டிருந்ததே அல்லாமல், என் ஐயத்திற்கான விடை கிடைக்கவில்லை.

மணக்குடவர், பரிதியார், பரிப்பெருமாள் எனப் பழைய உரையாசிரியர்களின் உரைகளைப் புரட்டிக் கொண்டே வரும்போது, காளிங்கர் உரையில், ஒரு வெளிச்சம் தெரிந்தது.

" இவன் இடாமையால் பிறர்சாவினும் கொலையாம் என்றது " எனக் காளிங்கர் உரை விளக்கியபோது, புதிய பொருள் ஒன்று புலனாயிற்று.

காளிங்கரின் நுட்பமான உரை, மாணவர்களுக்குச் சட்டென்று புரிந்துவிடாது என்பதால் அதனை எளிமையாக விளக்கிச் சொன்னேன்.

" நம்மிடம் உணவிருக்கிறது. பக்கத்தில் உள்ளவனிடம் பசி இருக்கிறது. பசித்திருக்கும் அவனுக்கு உணவிடாமல், நாம் மட்டும் உண்போமாயின், பசியால் அவன் இறந்து போவான். அவன் சாவுக்கு நாமும் ஒரு மறைமுகமான காரணம் ஆவோம். ஆதலால், நாம் உணவு இடாமையால், பிறர் இறந்துபோனால், அதுவும் ஒரு கொலையே " என விளக்கினேன்.

மாணவர்களை வியப்புப் பற்றிக் கொண்டது. இல்வாழ்க்கையில் உள்ளவர்களுக்கும் இக்குறள் பொருந்துமென்றாலும், எல்லாவற்றையும் துறந்த, தனக்கென ஏதும் வைத்துக் கொள்ளக்கூடாத துறவிகள், பகுத்துண்டு பல்லுயிர் ஓம்பவில்லையெனில் அது மிகப் பெரிய குற்றம் என்பதாலேயே, வள்ளுவர் இதனைத் துறவறவியலில் வைத்திருக்கக்கூடும் என்பது தெளிவாகின்றது.

அதிகாரத்தோடு தொடர்புபடுத்தாமல் குறளை மட்டும் பார்த்தால், பகுத்துண்டு வாழ வேண்டும் என்ற எளிய பொருள் மட்டும் தெரிகிறது.

அதிகாரத்தோடு இணைத்துப் பார்க்கும்போதுதான், பகுத்துண்டு பல்லுயிர் ஓம்பாத குற்றத்தை, வள்ளுவர் கொலைக் குற்றமாகப் பார்த்துள்ளார் என்னும் பேருண்மை புரிகிறது.

ஆம்! ஒரு குறள், எந்தப் பால், எந்த இயல், எந்த அதிகாரத்தின் கீழ் வைக்கப்பட்டுள்ளது என்பதை நாம் கவனிக்க வேண்டும். அவற்றையொட்டியும், அக்குறளின் பொருளில் புதிய தெளிவுகள் நமக்கு ஏற்பட வாய்ப்புண்டு.

❖❖❖


ALL UNDER ONE ROOF

SKC

SRIKANTH & CO.

Solicitors & Property Business Centre

SOLICITORS & ESTATE AGENTS

Sales, Letting & Management

- வீடு மற்றும் வியாபார ஸ்தாபனங்கள் வாங்குதல், விற்றல், வாடகைக்கு விடுதல்.
- அனுபவம் மிக்க சட்டத்தரணிகளின் ஆலோசனைகள், சேவைகள் எல்லாமே ஒரே கூரையின் கீழ் செய்து கொடுக்கப்படும்.
- வீடுகளுக்கும் வியாபார நிலயங்களுக்குமான சகல விதமான வங்கி கடன் உதவிகளும், காப்புறுதி திட்டங்களும் சுயாதீனமான தரகர்களின் மூலம் பெறுவதற்கு ஒழுங்குகள் செய்து தரப்படும்.
- வடமேற்கு லண்டனில் உள்ள பல்வேறு எஸ்ரேற் ஏஜென்டுகளை துணை ஏஜென்டுகளாக நியமித்து விரைவிலே வீடுகளை விற்பனை செய்கின்றோம்.
- சட்டத்தரணிகளின் தொழில் தர்மம் எல்லா வகையிலும் பேணப்படும் ஏனென்றால் நாம் Law Societyயினால் நெறிப்படுத்தப்படுபவர்கள்




557 High Road
Wembley, Middlesex
HA0 2DW

Opening Hours
Mon-Fri: 9am - 6pm
Sat: 9.30am-5pm

Tel: 020-8795 0648
Mobile: 07831 195 979
Fax: 020 8795 0649

# ஆன்மிகம் என்பது அறவழிப்பாதை

எஸ். முரளி

> தான் மேற்கொண்ட பணியில் சிரத்தையோடு ஈடுபடுவதுதான் சராசரி மனிதனுக்கு ஆன்மிகம்.

ஆன்மிகம் – லௌகிகம் என்ற இரண்டு கயிறுகளாலும் இழுபட்டுக் கொண்டுதான் இருக்கிறது மனித வாழ்க்கை. காசுபணம், நகை நட்டு, வீடு வாசல், நிலபுலம் என்றெல்லாம் லௌகீக வசதிகளைப் பெருக்கிக் கொள்வதையும், அப்படி ஏற்படுத்திக் கொண்ட வசதிகளைக் கட்டிக் காப்பதையும் வாழ்க்கையின் லட்சியமாகவே கொண்டிருப்பர் பலர். அப்படி, ஏற்படுத்திக் கொள்ளாமல் இருப்பதுதான் '' ஆன்மிகம் '' என்ற தவறான கண்ணோட்டமே இங்கு நிலவுகிறது. ஆனால் நமது பாரம்பரியம் இவ்வாறு கூறவில்லை. சாதாரண மனிதனை அது எதையும் துறக்கச் சொல்லவில்லை. அளவறிந்து வாழ்தலையே அது வலியுறுத்தியது. அப்படி வாழாதான் வாழ்க்கை '' எரிமுன்னர் வைத்தூறு போலக் கெடும் '' என்று எச்சரித்தது.

சராசரி மனிதனைப் பொறுத்தவரை ஆன்மிகம் என்பது அறவழிப்பாதைதான். அந்த அறம் என்பது செய்யும் தொழிலில் தர்மம் ஆகிறது. ஆத்மார்த்தமாக ஆன்ம ஈடுபாட்டோடு ஆத்ம சுத்தியோடு கருமமே கண்ணாகத் தான் மேற்கொண்ட பணியில் சிரத்தையோடு ஈடுபடுவதுதான் சிறந்த ஆன்மிகம்.

'' கடமையைச் செய்; பலனை எதிர்பாராதே '' என்றதும் நமது பாரம்பரியம்தான். இதன் பொருள் கூலியையே எதிர்பாராமல் மாடு மாதிரி உழை என்பதல்ல. '' ஒரு கடமையைச் செய்யும்போது அப்படி ஈடுபட்டு மெய்மறந்து அதனுள் ஒன்றாகக் கலந்து மனம் முழுதும் அதன் மேல் படிந்து அது வேறு நீ வேறு என்றில்லாமல் அந்தக் கடமையுடன் பின்னிப் பிணைந்து சர்வ லயிப்புடன் ஈடுபடும்போது, பலனைப் பற்றி யோசித்துக் கொண்டிருக்காதே '' என்பதுதான். ஈடுபடும்போதே பலனைப் பற்றிய கற்பனையும், கவலையும் எதிர்பார்ப்பும் வருமானால் லயிப்பு சிதறும், ஈடுபாடு நீர்த்துப்போகும்; முனைப்பு தடைபடும். பலனைப் பற்றிய தீர்மானம் என்பது கடமையைத் தொடங்கும் முன்னர் ஏற்பட வேண்டிய விஷயம். '' எண்ணித் துணிக கருமம் '' – என்றதும் நமது குறள் பாரம்பரியம்தான். '' துணிந்தபின் எண்ணுவம் என்பது இழுக்கு ''– என்று வழிகாட்டிய பாரம்பரியம் நமதுதான்.

எனவே ஆன்மிக ஈடுபாடு என்பது பயன் கருதாப் பேருழைப்பு – அதாவது அந்த உழைப்பு நடைபெறும் அந்த லயிப்பு மிகுந்த தருணத்தில்.

எழுத்துப் பணியோ, சங்கீதமோ, நடனமோ, தச்சுவேலையோ .... மேற்கொண்ட பணியில் கவனம் நழுவாது முழு ஈடுபாட்டோடு செயல்படுவதே கர்ம யோகம். அப்படி ஆத்ம லயிப்புடன் யார் ஈடுபட்டாலும் அவர்கள் வரையில் அவர்கள் ஆன்மிகவாதிகள்தான்!

மூன்று மணிநேரக் கச்சேரியில், ஒரு சுருதி பிசகாமல், ஒரு சிறிய அபஸ்வரம் கூட தட்டாமல் ஒரு தவம் போன்று மேடையில் நிகழ்த்தும் இசைக் கலைஞர், ஒவ்வொரு இழைப்பிலும், செதுக்கலிலும் நுட்பமும் நளினமும் சேர்த்து வேலைப்பாடுகளுடன் மரச் சாமான்களை உருவாக்கும் தச்சர், ஒரு நூலிழை பிசகாமல் அதியற்புதமாக வேலைப்பாடுகளுடன் ஒரு புடவையை நெய்து தரும் நெசவாளி ... இப்படிப் பலர் நம்மைச் சுற்றி வாழ்வில் நாம் காணும் கர்ம யோகிகள் – ஆன்மிகவாதிகள்! அவர்களின் செயல் நேர்த்தியில், அதன் வெளிப்பாட்டில் அவர்களின் ஆத்மபலம் பளிச்சிட்டுத் துவங்கும் !

ஆனால் லௌகீகம் என்ற ஒன்று – ' பொருளியல் ' என்ற ஒன்று இருக்கிறது. ஆத்ம பலத்தால் மட்டும் வாழ்ந்து விட முடியாதே ! வயிறும் இருக்கிறதே ! வயிற்றையும் காயவிடாமல், ஆன்மாவையும் சோர்வடையவிடாமல் பயணம் செய்வதே லௌகீக – ஆன்மிக லட்சியப் பயணம்.

இதுதான் சராசரி மனிதர்கள் தடுமாறும் இடம் ! லட்சியங்களா ? போகங்களா ? தத்துவங்களா ? சௌகர்யங்களா ? எதைத் தேர்ந்தெடுப்பது ? இலக்கியம், தத்துவம், கலை, மதம், கல்வி .... இப்படி ஒவ்வோர் அறிவுத் துறையிலும் தாம் ஏற்றுக் கொண்ட கொள்கை நிலைப்பாடுகள் தவிர – தங்களுடைய ஆத்மாவின் குரல் ஒன்றுக்குத் தவிர – வேறெதற்கும் செவி சாய்க்காமல், சமரசம் செய்து கொள்ளாமல், காசுபணம் சேர்ப்பது பற்றிய நாட்டமே இல்லாமல் வாழும் ' சுத்த ' ஆன்மிகவாதிகளும் உண்டு. இவை அனைத்தையும் காசுபணம் சம்பாதிக்கும். கருவிகளாகவே பயன்படுத்தி செழிப்படையும் சுத்த லௌகீகவாதிகளும் உண்டு.

சராசரி மனிதனைப் பொறுத்தவரையில் பிறருக்கு எதுவும் கேடு நினைக்காமல், தன் குடும்பத்தை முழு ஈடுபாட்டோடு கவனிப்பதும், முன்னெடுத்துச் செல்வதும் தான் அவனைப் பொறுத்தவரை ஆன்மிகம், அவன் இல்லிலே காணும் ' அறம் ' அது. நமது பாரம்பரியம் இதையும் அங்கீகரித்துள்ளது . அதையே மனைமாட்சி என்றது.

ஆன்மிகம் என்பது ஆன்ம ஈடுபாடு. அதுவே தர்ம வாழ்வின் தொடக்கம்; அது வாழ்வியல் என்ற பாதையில் ஓடும்போது ' இல்லறம் ' ஆகிறது; ஞான மார்க்கத்தின் வழியாகப் பாயும்போது ' துறவறம் ' ஆகிறது. இரண்டையுமே நமது பாரம்பரியம் அங்கீகரிக்கிறது.

நன்றி : தினமணி

## சூரியா திரைப்பட வெளியீடு

கடந்த 25.07.04 அன்று Heiualaya Palace (Cinema) மண்டபத்தில் இரவு நடைபெற்றது. தமிழ்நாட்டுத் தயாரிப்பு எனினும் ஈழத்துக் கதாநாயகன் இடம்பெற்றிருந்தமையும், நடிப்பும் எம்மை மகிழ்ச்சிப் படுத்தின. போராட்டச் சூழ்நிலைகள் மாறாது உள்ளமையால் தமிழீழத்தில் இதுபோன்ற படைப்புகள் தயாராகி உருவாவதற்கோ, நம்மவர் திறமைகளை வெளிக்கொணர்வதற்கோ வாய்ப்பில்லை. இத்திரைப்படத்தினைத் தயாரித்துத் தங்களை அர்ப்பணித்திருந்த அந்தத் துணிவாளர்கள் பாராட்டுதற்குரியவர்கள். இதற்கு நாம் வழங்கப்போகும் ஆதரவும், ஆசியுமே இப்படியான முயற்சிகளை வளர்க்க உதவும். இனி வரப்போகும் படைப்புகள் இன்னும் பல முன்னேற்றங்களைக் கொண்டிருக்கும் என்ற நம்பிக்கையுடன் அதில் பங்கு கொண்டுழைத்த அனைவரையும், குறிப்பாக தம்பி சுரேஷ் கிருஷ்ணாவையும் வாழ்த்துகின்றோம்.

## பிள்ளையார்பட்டி விநாயகர் ஆலயக் குடமுழுக்கு

தமிழ்நாட்டில் தற்போது பிரசித்தி பெற்று வரும் ஆலயங்களுள் பிள்ளையார்பட்டி கற்பக விநாயகர் கோயில் குறிப்பிடத்தக்கது. சரியாக பன்னிரண்டு ஆண்டுகளின் பின் கோயிலின் குடமுழுக்கு கடந்த 08.07.04 அன்று சிறப்புற நடைபெற்றது. (இலண்டனில் 20 ஆண்டுகள் ஆகியும் குடமுழுக்கு காணாத கோயில்கள் உண்டு). ஐந்நூறு சிவாச்சாரியர்களினால் தொண்ணூறு ஓமகுண்டங்களில் இக்குடமுழுக்கு விழா இடம்பெற்றிருந்தது குறிப்பிடத்தக்க விடயம். இவ்வாலயத்தின் வேத – ஆகமப் பாடசாலையில் பணியாற்றும் குருவானவர்களில் பெரும்பாலானவர்கள் இங்கு படித்தவர்களே. இங்கு அர்ச்சனைக்கான எந்தக் கட்டணமும் அறவிடப்படுவதில்லை. கார் பார்க்கிங் கட்டணம் இல்லை. காலணிகளைப் பாதுகாக்கக் காசு கேட்பதில்லை. குளியலறை, கழிப்பறை அனைத்தும் இலவசம். அத்துடன் தினசரி அன்னதானமும் உண்டு. தமிழகத்துக் கோயில்களிலேயே இக்கோயில்தான் வேறுபட்ட நிர்வாக அமைப்பைக் கொண்டது. தமிழக அரசினால் குடமுழுக்கை ஒத்தி வைக்குமாறு கேட்கப்பட்டபோதும் கூட அதை மறுத்துக் குறித்தபடி, வழக்கப்படி மாற்றமின்றி நடத்திக்காட்டிய இந்நிர்வாகம் செட்டிநாட்டவர்களது என்பது குறிப்பிடத்தக்கது. இங்கு பிரதானக் குருக்களாக இருப்பவர் பிச்சைக் குருக்கள் அவர்கள். எளிமையும், ஆழ்ந்த சமய அறிவும் கொண்ட இக்குருவானவர் தமிழகத்தில் உள்ள குருமாருக்கெல்லாம் சிகரம் போன்றவர்.

## நாடக விழா – 2004 :

இலண்டன் தமிழ் அவைக்காற்றுக் கலைக் கழகத்தின் 2004 ஆண்டிற்கான நாடக விழா 14.07.2004 அன்று WINSTON CHURCHILL THEATRE மண்டபத்தில் நடைபெற்றிருந்தது. அவசரக்காரர்கள், அவன்– அவள், பெருங்கதையாடல், வேருக்குள் பெய்யும் மழை என நான்கு நாடகங்களும், கான சாகரம் எனும் இசை நிகழ்ச்சியும் இடம்பெற்றன. நன்கு தயாரிக்கப்பட்டு வழமையான க. பாலேந்திரா அவர்களின் நெறியாள்கையில் வழங்கப்பட்ட இந்நிகழ்வுகள் அனைத்தும் சம காலத்தின் தடுமாற்றங்களையும், அதற்கான சிந்தனைத் தெளிவையும் நன்கு தெரியப்படுத்தின. அவைக்காற்றுக் கழகத்தின் பழமையான ரசிகர்கள் சமுகமளிக்க தவறவில்லை. செழியனின் ' வேருக்குள் பெய்யும் மழை ' விசேடமாகப் பாராட்டப்பட வேண்டும்போல் தோன்றுகின்றது. அற்புதமான படைப்பு அது. தமிழ் அவைக்காற்றுக் கலைக் கழகத்துக்கு எம் நல்வாழ்த்துகள்.



## இலண்டன் ஈலிங் அருள்மிகு கனகதுர்க்கையம்மன் கோயில் வருடாந்த மகோத்சவம்

16.07.2004 ஆரம்பமாகி நடைபெறுகின்றது. 10.08.2004 வரை நடைபெறப்போகும் இவ்வுற்சவத்தில் சந்நிதி இரதோற்சவ விழாவும், 9ஆம் தேதி தீர்த்தமும், 10ஆம் தேதி சங்காபிஷேகமும் நடைபெற உள்ளன. தமிழ் ஈழத்தில் பல பொதுத் தொண்டுகளைச் செய்து வரும் இக்கோயில் இம்முறை மட்டக்களப்பில் ஆரம்பிக்கப்போகும் இலவச வீடமைப்புத் திட்டத்திற்கு உதவப்போகின்றது. ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டுள்ள இத்திட்டத்தை மேலும் விரிவு படுத்த இக்கோயில் நிர்வாகம் விரும்புவது பாராட்டப்பட வேண்டிய பொதுப்பணியும், அர்ப்பணிப்பும் ஆகும்.

## ரூட்டிங் அம்மன் கோயில் தேர் உலா

ரூட்டிங் முத்து மாரியம்மன் ஆலயத்தில் வருடாந்தம் நடைபெறும் தேர் உலா 30.08.2004 அன்று திங்கட்கிழமை காலை ஆரம்பமாகின்றது. வழக்கம்போன்று காலை புறப்படும் முத்து மாரியம்மனின் தேர் உலா வழக்கமான முறைப்படி சென்று மாலை வரை மிச்சம் சதுக்கத்தில் தரித்து நிற்கும் என்பது குறிப்பிடத் தக்கது.

## பூபாள இராகங்கள் 2004

யாழ் கம்பர் மலை வித்தியாலயம் – கொம்மந்துறை பழைய மாணவர் சங்கம், ஐக்கிய இராச்சியம் வழங்கும் பூபாள இராகங்கள் 2004 நிகழ்வுகள் 14.8.2004 சனிக்கிழமை மாலை 5.00 மணிக்கு கிரீன்போர்ட் மண்டபத்தில் நடைபெற உள்ளது. நாட்டியக் கலையரங்கம், வழக்காடு மன்றம், நாடகம், கான மழை எனப் பல நிகழ்வுகள் நடைபெற உள்ளன. தொடர்பு : 07 947 471 529

இலண்டன் மாநகரில்

# Galaxy News

உங்களுக்குத் தேவையான விரும்பிய
நூல்களை ஓடருக்கு
உங்கள் வீட்டுக்கு அருகாமையில்
உள்ள தமிழ்க் கடைகளில்
பெற்றுக் கொள்ளலாம்

தொடர்புகளுக்கு
**Mr. K. Alagan**

**Galaxy News**
**84, Brooks Croft Road**
**London E17 4JR**

**Tel : 07958 360 176**
**Fax : 020 8527 2324**

# Meera Gold Smith

*Gems & Jewellery*

**896 Garratt Lane, Tooting, London SW17 ONB**
Tel : 020 8767 2616 Mob : 07958 948 685
www.meera_jewellery.com

பழைய தங்கத்தில்
புத்தம் புதிய நகைகள் செய்து கொள்ள,
அதிர்ஷ்ட நவரத்தின கற்களை
நியாய விலையில் பெற்றுக்கொள்ள,
உங்களுக்குத் தேவையான 22ct சிங்கப்பூர் நகைகளை
நியாய விலையில் உடனுக்குடன் பெற்றுக்கொள்ள

**MEERA GOLD SMITH**

தங்கம் வாங்கும்பொழுது தங்கம்
தெரிந்தவர்களிடம் வாங்குங்கள்.

**MEERA GOLD SMITH**

பிரமாண்ட காட்சியறை இல்லை
ஆனால்
பிரமிக்க வைக்கும்
கலைவண்ணம் வடிக்கும்
நகைச்சிற்பிகளின்
கலைக்கூடம்

# MARKANDAN & CO

## SOLICITORS & COMMISSIONORS FOR OATH

**CONVEYANCING SPECIALIST**
Fast, Efficient and Friendly services in
- ✓ Residential Conveyancing
- ✓ Commercial Conveyancing
- ✓ Re - Mortgages
- ✓ Liquor Licenses
- ✓ Company Registration


**We Win No Fee Basis**
**Employment Law**
**Personal Injury**

**IMMIGRATION SPECIALIST**
Free Initial Consultation on all Immigration matters
- ✓ Immigration / Asylum
- ✓ Police station visits
- ✓ Overseas Work Permits
- ✓ Working Holiday Maker visa
- ✓ Entry Clearance Appeals
- ✓ Sponsor Letters
- ✓ Power of Attorney
- ✓ Translations / Unmarried Certificates

AFFORDABLE RATES ! We are Open on Saturdays
Thamil House, 720 Romford Road, Manor Park, London E12 6BT
Email : mm@markandan-solicitors.co.uk

**Tel : 0208 514 8188** **Emergency Line : 07958618106**


THE FINE SRI LANKAN & INDIAN RESTAURANT
" அறுசுவை பதார்த்தங்கள் அனைத்தையும்
உயர்தரமாய் வழங்கிடும் ஓர் உணவகம் "
406 - 408 Lewisham High Road
Lewisham
London SE 13 6LJ
Tel : 020 8690 3392 - 6902617
EELAM SHOP
399 Lewisham High Street
Lewisham
London SE13 6NZ
Tel : 020 8690 6545
Taste of EElam


HOTEL WESTEERN
Hotel Westeern (Pvt) Ltd
35, Frankfurt Place, Bambalapitiya, Colombo 4, Sri Lanka
Tel : 0094 1 507161, 0094 1 507162, 0094 1 507163, 0094 74 518485
Fax : 0094 74 518481
Ready to accommodate you ......
....at the Sun kissed Beach of Srilanka
30 Guest Rooms, 5 Luxurious Suites
Restaurant & Party Hall
Conference Hall
HOTEL WESTEERN
Situated at the Heart of
Colombo City
E-mail :
infor@hotelwesteern.com
Web : www.hotelwesteern.com
Approved by the
Ceylon Tourist.com


மாபெரும் பட்டுச்சேலைப் பரிசுத் திட்டம்
லட்சுமி ஜுவலர்ஸ்
276 High Street North
EASTHAM E12 6SA
Tel : 020 8470 5600 Fax : 020 8470 3448
இப்படத்தில் இரண்டு சேலைகள்
பிரசுரிக்கப்பட்டுள்ளன
கேள்வி 1 : சேலைகளில் அசல் எது நகல் எது
கேள்வி 2 : இரண்டு சேலைகளின் இந்திய
விலையைச் சரியாகக் குறிப்பிடவேண்டும்.
சரியாகக் குறிப்பிடும் அதிர்ஷ்டசாலிகளுக்கு
£ 100 பவுண் பெறுமதியான கோலம்
சேலை பரிசாக வழங்கப்படுறது.
எமது நிறுவனத்தில்
பெற்றுக் கொள்ளலாம்.
உங்கள் பதிலை
அனுப்ப வேண்டிய முகவரி
தமிழர் தகவல்

# யாழ்ப்பாண யோக சுவாமிகள்

நிஷாணி ஜெயபாலன்

லண்டன் வாழ் குழந்தைகளே, மாணவர்களே, மாணவிகளே, பெரியோர்களே ஒரு மகாயோகியைப் பற்றி, உங்கள் மனதில் வாழ்வின் உயர் மூலயங்களைப் பதிய வைக்கும் நோக்கத்தோடு சிவயோக சுவாமிகளின் வரலாற்றையும், அவரின் முக்கிய சில அருள்மொழிகளையும் எழுதுகிறேன். உங்களின் மனத்தைத் தூய்மையாக்கி இறைவழிப்படுத்த உதவும் என நினைக்கின்றேன்.

மனிதர்களை மனிதர்களாக வைப்பதற்காகவே பூமியில் சித்தர்கள், யோகிகள், ஞானிகள் அவதரித்து வாழ்ந்து காட்டியுள்ளார்கள். யாழ்ப்பாண சிவயோக சுவாமிகளிடம் தெய்வீக உணர்வும், கருணையும் இருந்ததால் மனித சமுதாயம் நிலைத்து நின்று பெருகி வாழ அவரின் அருள் மொழிகள் அச்சாணியாக இருந்தன. இவர் 1872 ஆம் ஆண்டு மாவிட்டபுரத்தில் பிறந்தார். தனது கல்வியையும், வேதாந்திர சாஸ்திரங்களையும் திரிபுற கற்றபின்பு, துறவு கொண்டு தனது ஆச்சிரமத்தை யாழ்ப்பாணத்தில், கொழும்புத்துறையில் ஒரு சிறிய வீட்டில் அமைத்துக் கொண்டார். அங்கு சுவாமி குருபூசைகள் செய்து வந்தார். ஈழநாட்டின் மாதவப் பேறாய்த் தோன்றி, பேரருட்கருணை கொண்டு காலத்துக்குக் காலம், தம்மையே சரண் என நாடி வந்த கிருஸ்தவர்கள், இஸ்லாமியர்கள், ஆங்கிலேயர்கள், சிங்களவர்கள், பிறநாட்டவர்கள் அனைவரையும் இனப்பாகுபாடு இல்லாமல் அருள்மொழிகளைப் போதித்தார். ஆங்கில மொழியை நன்கு கற்றிருந்ததால் பிற நாட்டவர்கள் இவரிடம் ஆன்மிகத்தைப் பற்றி அறிந்தனர். சைவ நெறியில் தமிழ் மக்கள் வாழ்வதற்கும், அதினின்று விலகியோருக்கு, உய்வு நெறி காட்டுவதற்கும் உறுதுணையாக அயராது பாடுபட்டார். மக்களின் எதிர்கால வாழ்க்கை எப்படி அமையும் என்பதைச் சோதிடம் போலக் கூறிவிடுவதால் அவரிடம் நம்பிக்கை கொண்டனர். நன்மையும், தீமையும் சமாந்திரமாகச் செயல்படும் என்பதை வலியுறுத்திக் கூறுவார்.

அவரின் தெய்வீகத்தை அறிந்தவர்கள் அவரின் (DICIPLES) சீடர்களாகச் சேர விரும்பினர். 1953 ஆம் ஆண்டு லோட் சோல் பறி (LORD SOUL BURY) இலங்கையில் கவர்னராகக் கடமை புரிந்தார். அவரின் மகன் ஜேம்ஸ் றம்ஸ் போதம் (JAMES RAMS BOTHAM) யோக சாமியின் சிரேஷ்ட சீடராகப் பதவி ஏற்று, காவி உடை அணிந்து, விபூதி அணிந்து யோக சாமியின் போதனைகளை இலங்கை முழுவதும் பரப்பினார். அதேபோல் அமெரிக்காவிலிருந்து வந்த ராபர்ட் கான்சன் (ROBERT HANSEN) சீடராகி, சுப்ரமணிய சுவாமி எனும் பெயருடன் யோகசாமியின் போதனைகளை உலகெங்கும் பரப்பி அமெரிக்காவில் ஹவாயில் (HAWAIT) யில்ஆச்சிரமம் அமைத்து யோகர் சுவாமியின் ஆன்மிகத்தைப் பரப்பினார். ஹவாயில் இந்தியச் சிற்பங்கள் அமைந்த கருங்கல்லால் ஆன சிவன் கோவில் கட்டப்பெற்று முடிக்கப்பட்டது. இது சுப்ரமணிய சுவாமிகளின் தலைமையிலேயாகும். யாழ்ப்பாணத்தில் கைதடி மார்கண்டு சுவாமியும், சிவத்தொண்டன் நிலய செல்லத்துரை சுவாமிகளும் யோகரின் சீடர்களாக விளங்கினர். ஈழ நாட்டில் ஒரு யோகசாமி இருந்து சைவத்துக்கும் தமிழுக்கும் தமது உடல், பொருள், ஆவி அனைத்தையும் அர்ப்பணித்து சேவை செய்து புகழ் பெற்றதை எல்லோரும் அறிந்திருக்க வேண்டுமென்பதே இக்கட்டுரையின் நோக்கமாகும். அவரின் முக்கிய சில அருள்மொழிகளைக் கீழே தந்துள்ளேன். அவையாவன :

எல்லாம் நியதியாயிற்று, எங்கள் செயல் ஆவது ஒன்றுமில்லை. ஒரு பொல்லாப்புமில்லை எல்லாம் எப்பவோ முடிந்த காரியம்.

ஒருவருக்குத் தேவையான யாவும் அவர் பிறப்பதற்கு முன்னரே உலகில் படைக்கப்பட்டுள்ளன

சன்மார்க்கம் ஒன்றே யானறிந்த நன்மார்க்கம் சர்வமும் இதுவே. இதுவே உன்னையறிய இலகுவான மார்க்கம்

ஒளவையார் மொழிகளில் எல்லா உண்மைகளும் உபநிடதச்சாரமும் உள. அவற்றையே மனிதர் படித்தாற்போதும்.

மனத்தை இறைவனிலேயே இலயிக்கச் செய்வாயாக " பதியே பசுவாகவும் பாசமாகவும் ஆயது " என்று செல்லப்பா கூறியிருக்கிறார்.

இன்பமும் துன்பமும் மனத்திலேயே உள்ளன. வெறுங்கையுடன் உலகிலே தோன்றினாய். அழைப்பு வந்தவுடன் வெறுங்கையுடனேயே அதனை விட்டுச் செல்ல வேண்டும்.

அவனருளாலன்றி ஓரணுவும் அசைவதில்லை என்பதை அறிவாய்

இதனை எய்தினோம். அதனைச் சாதித்தோம் என எண்ணி மகிழாதீர், யாவும் தாமாகவே நடைபெறுகின்றன.

பொய்யும் பேசாதே மெய்யும் பேசாதே மௌனமாகவிரு

உன் கண்கள் தெய்வம், உன் கால்கள் தெய்வம், உன் கைகள் தெய்வம், என் பேச்சு தெய்வம், என் மனமுந் தெய்வம்.



30.08.2004

தேர்விழாவும், ஆன்மிக ஒன்று
கூடலும் நடைபெறும்

சிவயோகம்

லண்டன்

Competitive Rates to All Countries A-Z

Fantastic rates - call Sri Lanka from 10p

™ සීගිරි
சீகிரி
SIGIRI

enjoy
home comforts
with a **Sigiri*Home*** account
from Sri Lanka Telecom

மலிவான விலை – தெளிவான ஒலி – விரைவான இணைப்பு



*best prices - best connections - best quality*

visit www.sigiri.net or call our hotlines on 0800 485 1110 (24 hours) or 020 7094 9494

Sri Lanka Telecom




யாழினி தயாரிப்புகள் விற்பனையாளர்கள்

அரிசிமா, மிளகாய்த் தூள், நல்லெண்ணெய், அவல், ஊறுகாய்,
வடகம், மரக்கறி வகைகள், பழவகைகள், கடல் உணவுவகைகள்,
இன்னும் பல உடனுக்குடன் இறக்குமதி செய்கிறோம்

259-261, London Road
West Croydon
Surrey CRO 2RL
Tel : 020 8684 6269
Fax : 8686 4577

249 Northolt Road
Harrow
Middlesex HA2 8HR
Tel : 020 8423 9933

364 - 366, Bath Road
Hounslow
Middlesex TW4 7KT
Tel : 020 8577 6002
Fax : 020 8570 2323

# BEST FOOD SUPERMARKET

LICENCE - NEWS - GROCERIES - HALAL MEAT - FRESH & FROZEN FISH - FRUIT & VEG - AFRO CARIBBEAN - SRI LANKAN & ASIAN FOODS

# தீர்வு

வத்தியூர் மைக்கல்

காலை நேரம் – ஆகாஷ் கண்விழித்தான். இலேசாகத் தலையைத் தூக்கி மேசை மணிக்கூட்டை நோக்கினான். எட்டு மணிக்குப் பத்து நிமிடங்கள் இருந்தன. அலாரம் அடிக்கும் முன்னரே தான் கண்விழித்துவிட்டதாக அப்போதுதான் உணர்ந்தான்.

ஆகாஷ் 28 வயதுடைய ஒரு நடுத்தர இளைஞன். எட்டு வருடங்கள் வெளிநாட்டில் வசித்துவிட்டு தற்போது தாய், தந்தையைப் பார்ப்பதற்காகவும், திருமணம் செய்து கொள்வதற்காகவும் தனது தாய்நாட்டிற்கு வந்திருக்கிறான். இன்று காலை பெண்வீட்டார் ஆகாஷைப் பார்ப்பதற்காக வருகிறார்கள். எட்டு மணிக்கு அலாரம் வைத்திருந்தாலும் அவர்களின் வருகையும், குறிப்பாகப் பெண்ணின் நினைப்பும் அவனை முன்னரே விழிக்கச்செய்திருந்தது.

நேற்று ஊருக்கு வந்தவனுக்கு இன்றைக்குப் பெண் பார்க்கும் படலம் என்றால் எப்படி இருக்கும் ?

எப்போது வருவார்கள் ? அவள் எப்படி இருப்பாள் ? அழகாக இருப்பாளா ? எனக்கு ஏற்றவளா ? இல்லை நான் அவளுக்கு ஏற்றவனா ? நிறையப் படித்திருப்பாளோ ? கேள்விகளுக்குப் பதில் கிடைக்காத நேரத்தில் ..... அலாரம் அடித்தது. நேரம் சரியாக 8.00 மணி.

யோசனைகளில் இருந்து விடுபட்ட ஆகாஷ் எழுந்து அலாரத்தை நிறுத்திவிட்டு கிணற்றடிக்குச் சென்றான். எட்டு வருடங்களின் பின்னர் முதல் முதல் ஊருக்கு வந்திருக்கிறான். இதில் அவசர அவசரமாய்த் திருமணம் வேறு – எல்லாம் அப்பா, அம்மாவின் வற்புறுத்தல்தான் காரணம். ஆகாஷ் ஒரே ஒரு பிள்ளை. இவனை 20 வயதில் வெளிநாட்டிற்கு அனுப்பிவிட்டு ஊரில் தனியே வாழ்ந்தவர்கள். இப்போது தமது கடமையைச் செய்ய வேண்டும் என்று நினைத்திருக்கிறார்கள்.

ஆகாஷ் கப்பிக் கிணற்றில் தண்ணியை அள்ளிக் குளித்தான். அவனுக்குக் கிணறு ஒன்றும் புதுமையாக இருக்கவில்லை. ஆனால் கடினமாக இருந்தது. நிறைய வருடங்களின் பின்னர் புதிதாகக் குளிப்பதாக ஒரு உணர்வு.

திடீரென எங்கிருந்தோ ஒரு சத்தம் வந்தது. ஆகாஷ் சத்தம் வந்த திசையை நோக்கினான். பக்கத்து வீட்டில் இருந்து ஒரு சிறுவன் வேலியின் நீக்கல்களால் ஆகாஷைப் பார்த்துக் கொண்டிருந்தான்.

ஆகாசுக்குச் சிரிப்பு முட்டியது. குளித்து முடித்து துவாலையை எடுத்து, தலையைத் துவட்டி, சிறுவனை நோக்கி நடந்த வண்ணமே ....

" தம்பி எப்படி இருக்கிறீங்கள் ? உங்களக் குழந்தியில பார்த்தனன். இப்ப அந்தமாதிரி வளந்திட்டீங்கள் .. சரி அப்பா எங்க ? "

" அப்பா .... செத்துப் போயிட்டார் ! "

ஆகாசுக்கு " பக் " என்றது. சிறுவனுடைய வாயில் இருந்து வந்த முதல் வார்த்தை ஒருத்தரை கொன்று வரும் என்று சற்றும் எதிர்பார்க்கவில்லை.

" அப்படியென்றால் தர்மண்ணை இறந்துவிட்டாரா ? "

இதைப்பற்றி அம்மா எதுவும் சொல்லவில்லையே ? சீ... இருக்காது தானே தனக்குச் சமாதானம் செய்து கொண்டு மீண்டும்

" தம்பி உங்கட அப்பான்ர பேர் தர்மலிங்கம்தானே "

" இல்ல ஆனந்தராசா ! "

" அப்பாடா தர்மண்ணை இருக்கிறார் ! " ஒரு பெருச்சு விட்டுக் கொண்டான். பின்னர் –

" தம்பி அப்ப நீங்கள் உந்த வீட்டிலதான் இருக்கிறீங்களோ ? "

" ஓம் "

" அப்ப உங்க இருந்தாக்கள் எல்லாம் எங்க போயிட்டினம் "

" தெரியாது " என்று தலையை ஆட்டிய சிறுவன் தொடர்ந்து " நீங்கள் வெளிநாட்டில இருந்தல்லோ வந்தனீங்கள் ... அப்பயேன் எனக்கு சொக்கிளேற்றுத் தரயில்ல ? "

ஆகாசுக்குத் தூக்கிவாரிப் போட்டது.

இதை அவன் எதிர்பார்க்கவில்லை.

சிறுவனின் கேள்விக்குச் சமாளித்தான். " அது தம்பி ... வந்து .. எல்லாம் உள்ள இருக்கு இன்னும் பிரிக்கயில்ல ... பிரிச்சு எடுத்து உங்களுக்கும் தரல்லாம். "

" நீங்கள் பொய் சொல்லுறியள் .... நேற்று ' வசந்தி ' எனக்குப் பாதி தந்தவள் – நேற்று உங்கட வீட்டுக்கு வாறதுக்கு அம்மாவைக் கேட்டனான் அம்மா விடயில்ல ..."

ஏன் ?

" அது... வசந்திக்குத்தான் நீங்கள் சொந்தமாம். நாங்கள் உங்களுக்குச் சொந்தமில்லையாம் "

ஆகாசுக்குச் சிறுவனின் பேச்சு கரும்பாக இருந்தது. மிகவும் பிடித்துப் போயிற்று. இருந்தாலும் அவனுள் ஒரு குற்ற உணர்வு குத்திக்காட்டியது. ஒரு சிறுவனின் மன உடைவுக்கு நான் காரணமாகிவிட்டேனோ ?

உண்மையில் யார் யாருக்கு என்னென்ன கொடுத்தது என்பது கூட அவனுக்கு ஞாபகம் இல்லை. பயணக் களைப்பு வேறு –

இதில் அத்தனை குழந்தைகளையும் ஞாபகத்தில் வைத்திருக்க முடியுமா ? யார் இந்த சிறுமி ' வசந்தி ' என்பது கூட ஞாபகமில்லை.

சிறுவனின் முகத்தை உற்றுப் பார்த்தான். ஆகாசுக்கு கூச்சமாக இருந்தது.

'' தம்பி உங்கட பேர் என்ன ? ''

'' றஞ்சித் ''

'' ஆ ... றஞ்சித் ... நான் சொக்கிளேற்றெல்லாம் கொண்டு உங்கட வீட்ட வாறன் என்ன ! ''

'' உண்மையாவே சொல்லுறீங்கள் '' என்று கேட்டவன் திடீரென்று ஓடிவிட்டான்.

'' தம்பி இந்தா தேத்தண்ணியைக் குடி ''

பின்னால் ஆகாசின் தாயார் லட்சுமி அம்மாள் தேனீர்க் கோப்பையை நீட்டினார்.

தேனீரை வாங்கிய ஆகாஷ்

'' அம்மா பக்கத்து வீட்டு சிறுவன் றஞ்சித்தோட கதைச்சுக் கொண்டிருந்தனான் உங்களக் கண்டவுடன அவன் ஓடிட்டான் ''

லட்சுமி சிரிப்புடன்

'' சரியான வால் ! ஒரே ஒரு பிள்ளையெண்டு நல்ல செல்லம் குடுத்து வைச்சிருக்கினம். உன் கொப்பருக்கு வேலை நாள் முழுதும் வேலி அடைக்கிறது. பெடியனுக்கு வேலை பொட்டுப் பிரிக்கிறது. எத்தின தரம் பேசினாலும் காதில வாங்காது. குழப்படி தாங்கேலாதாம். ''

தனது வீட்டாருக்கு ' றஞ்சித்தை 'ப் பிடிக்காது என்பதைத் தாயின் கரடு முரடான வார்த்தையில் இருந்து புரிந்து கொண்டான்.

'' அம்மா ! சின்னப் பிள்ளையள் எண்டால் அப்படித்தாணை. இஞ்சயென்ன குழப்படி ? வெளிநாடுகள்ள வந்து பாருங்கோ. இதுகள் செய்யிறதை விட அதுகள் முக்காவாசி கூடச்செய்யுங்கள். எல்லாம் ஒரு வயசுக்குத்தானே ! ''

ஆகாஷ் அம்மாவைச் சமாளித்தான்

'' என்ன ! நேற்று வந்திட்டு, இண்டைக்கு வக்காலத்து வாங்கிறாய். கொப்பரும் நீயும் ஒரு குட்டையில ஊறின மட்டையள் மாதிரித்தான். என்னண்டாலுஞ் செய்யுங்கோ, எனக்கு ஆயிரத்தெட்டு வேல கிடக்கு என்ன விடுங்கோ .... ''

படபடத்துவிட்டு நகர முயன்ற தாயாரிடம் குடித்து முடித்த தேனீர்க் கோப்பையை நீட்டியவாறு ....

'' அம்மா தருமண்ணையாக்கள் எங்க போயிட்டனம் ? '' என்றான்.

'' அந்தக் கதையேன் கேட்கிறாய் ? இடம் பெயர்ந்து போகேக்க கிளாலிக்கடலில எல்லாரும் ஒண்டாய்ப் போய் சேந்திட்டுதுகள் – பாவம் ! ம் ... எல்லாம் விதி '' ... பெருமூச்சோடு இழுத்து நிறுத்தினார்.

ஆகாஷ் அதிர்ந்தான்

'' அப்ப ஏன் எனக்கு ஒண்டும் சொல்லயில்ல ? ''

'' நீ கவலைப்படுவாயென்று கொப்பாதான் ஒண்டும் எழுதக் கூடாது எண்டு மறிச்சவர். ''

ஆகாசுக்கு ஒரு மாதிரியாக இருந்தது. எட்டு வருடங்கள் எதுவுமே தெரியாமல் வாழ்ந்து விட்டேனா ? வேலை, வேலை, வேலை என்று பணம் சம்பாதிப்பதிலேயே குறியாய் இருந்துவிட்டேனா ? தருமண்ணை எவ்வளவு ஒரு நல்ல மனிதர் ! அவருக்கு இப்படி ஒரு கதியா ? நேற்று வரை சிரிச்சு, பேசிய உறவுகள் இன்று திடீரெனக் காணாமல் போனால் எப்படி ?

ஆகாஷ் குழம்பிப் போயிருந்தான். அவன் இதயத்தில் இப்போதைக்கு கேள்விகளுக்கு மட்டும்தான் இடம் இருந்தது.

ஆகாசும் முந்தி ஓரிரு தடவைகள் ஊரில் இடம் பெயர்ந்து இருக்கிறான். பிரச்சனைகளிலும் அகப் பட்டிருக்கிறான். ஆனால் இப்போது இருக்கும் மக்கள் எல்லோருக்குமே ஓரிரு பிரச்சனைகள் கட்டாயம் இருக்கும் என்று ஊகித்துக் கொண்டே வீட்டினுள்ளே நுழைந்து ஆடை மாற்றினான். பின்னர் சொக்கிளேற்றுகளும், ஒரு சின்ன ரீசேட்டும் எடுத்து ஒரு பையில் போட்டுக் கொண்டு

'' அம்மா, பக்கத்தில றஞ்சித்துக்குக் கொஞ்ச சொக்கிளேற் குடுத்திட்டு வாறன். அதுசரி ஆர் வசந்தி ? ''

இப்போது இன்னொரு அறையில் இருந்து வெளியில் வந்தார் ஆகாசின் அப்பா பொன்னம்பலம் ;

'' அது உவள் வனிதாரை பேத்தி. அதுவும் சரியான வால். எனக்குப் பொழுது போறதே அதுகளாலதான். '' என்று ஒரு கனத்த சிரிப்புடன் கூறினார்.

ஆகாஷ் பக்கத்து வீட்டுப் படலையில் நின்றான். தூரத்தில் அவனைக் கண்டுவிட்ட நாய் குரைக்கத் தொடங்கியது. றஞ்சித் நாயின் சத்தம் கேட்டு வெளியில் வந்தான். ஆகாசைக் கண்டதும் '' றொக்ஷன் ... டேய் போ அங்க ... போய்ப்படு '' என்று கூறியதும் நாய் ஒரு லையில் போய்ச் சுருண்டு படுத்துக் கொண்டது.

'' அது கடிக்காது ..... உள்ளுக்கு வாங்கோ.... அம்மா .... நான் சொன்னன் அவர் சொக்குளேற்று கொண்டு வாறார்...'' என்று சந்தோஷத்தில் கத்தித் தாயைக் கூப்பிட்டான்.

ஆகாஷ் உள்ளே நடந்தான். தர்மண்ணையின் ஞாபகங்கள் அவனைச் சுற்றி வந்தன. பல வருடங்கள் கழித்து மீண்டும் அவருடைய வீட்டில் அவன் காலடி எடுத்து வைக்கின்றான். அவர் இல்லையே என்ற வருத்தம் அவனை வாட்டியது.

வீட்டின் உள்ளே நுழைந்த ஆகாஷ் தனது கையில் இருந்த பையை றஞ்சித்திடம் நீட்டி '' இதுக்குள்ள சொக்கிளேற்றும், ஒரு பெனியனும் இருக்கு எல்லாம் உனக்குத்தான் '' என்றான்.

றஞ்சித் உடனே வாங்கிக் கொண்டு தாயிடம் ஓடினான். ஆகாஷை வரவேற்க வந்த றஞ்சித்தின் தாய் – திடுக்கிட்டுப் போனாள்.

'' ஆகாஷ் நீங்களா ? ''

'' நீங்களே வெளிநாட்டில இருந்து வந்தது ? அப்ப பக்கத்தில இருக்கிறது உங்கட அம்மா, அப்பாவையே ? எட்டு, ஒன்பது வருஷம் வரும் என்ன ? இப்பவும் அப்படியே இருக்கிறியள் ! ''

ஆகாஷ் அதிகமாகக் குழம்பிப்போனான்.

வெட்கமாக இருந்தது. தன்னைத் தெரிந்தவளாக இருக்கிறாள். இத்தனையும் விசாரிக்கிறாள். ஆனால் எனக்கு அடையாளம் தெரியவில்லையே ? யாராக இருக்கும் ? யோசித்துப் பார்த்தான். கிட்டவும் இல்லை, எட்டவும் இல்லை.

என்ன யோசிக்கிறீங்கள் ?

என்னை இன்னும் ஆர் எண்டு கண்டுபிடிக்க யில்லையோ ? வெளிநாட்டுக்குப்போனா உடனேயே மறந்திடுவினம் எண்டு சனம் கதைக்கிறது சரியாப் போச்சு

ஆகாஷ் செய்வதறியாது தவித்தான்.

குழப்பத்தில் தடுமாறினான்.

'' சொரி...சரியா... ஞாபகம் வரயில்லை... ''

அதுக்குமேலே அவனைத் தவிக்கவிட விருப்பமில்லாதவளாய்...

'' நான்தான் நந்தினி இப்ப ஞாபகம் வருகுதோ? ''

'' மருதங்கேணி ஸ்கூல்ல படிச்ச நந்தினியோ? ''

'' ஓம் ஏன் சந்தேகமாய் இருக்குதோ? ''

திகைத்துப் போனான் ஆகாஷ்

கலகலப்போடு சிரித்துப் பழகிய அந்த நந்தினியா இவள்? பாடசாலையில் படிப்பில் மட்டுமல்ல அழகிலும் இவள் தான் முதல் மாணவி. ஆகாஷ் A/L படிக்கும்போது நந்தினி 10ஆம் ஆண்டு படித்துக் கொண்டிருந்தவள். எல்லோருடனும் சகசமாகப் பழகி அனைவரையும் கவர்ந்தவள். எத்தனையோ மாணவர்கள் அவளுக்குக் காதல் கடிதம் கூட எழுதி இருக்கிறார்கள். இதில் ஆகாசும் கூட. சுருக்கமாகச் சொன்னால் அன்று நந்தினி ஒரு கல்லூரிக் கதாநாயகி. இன்று...உருமாறி...

'' என்ன ஆகாஷ் வெளிநாட்டில் இருந்து யோசினையைத் தான் ட்டை ட்டையாகக் கொண்டு வந்த மாதிரித் தெரியுது. '' நந்தினியின் இந்த வார்த்தைகளால் சிந்தனையில் இருந்து மீண்டு வந்த ஆகாஷ். அவளைப் பார்த்து

'' நந்தினி இதெல்லாம் எப்ப நடந்தது? லவ் மரீட்டா? எப்பிடி இருக்கிறீங்கள்''

'' எப்பிடி இருக்கிறன் எண்டு பாத்தா தெரியுதுதானே ! எல்லாம் மாறிப் போச்சு – எனக்குத்தான் ' லவ் ' எண்டாலே பிடிக்காதெண்டு உங்களுக்குத் தெரியுந்தானே ! அப்பா அம்மாவுக்குப் பிடிச்ச மாப்பிள்ளை. சின்ன வயசிலேயே கலியாணம், அதில சின்னப் பிள்ளை வேற இடையில அவரும் போய்ச்சேர்ந்திட்டார். ம்... ஏதோ எங்கட வாழ்க்கை வண்டியும் உடைஞ்சிபோயும் ஓடிக்கொண்டிருக்குது. ''

அவள் வாழ்க்கையில் நிறைந்த சோகங்களைக் கடந்திருந்தாலும் வார்த்தையில் நிறைய நம்பிக்கை தெரிந்தது. எட்டு வருடங்களில் எத்தனை மாற்றங்கள். ஆகாசுக்கு எல்லாம் தலைகீழாகத் தெரிந்தது. அன்று எப்படி இருந்தவள் இன்று அடையாளம் தெரியாமல் நிலைகுலைந்து போய் இருக்கிறாள் ஏன்? எதற்காக? இன்னும் இப்படி எத்தனை நந்தினிகள் இருக்கிறார்கள்?

இதற்கு முடிவுதான் என்ன?

இத்தனை காலமும் ஒரு கிணற்றுத் தவளைபோல வாழ்ந்து விட்டேனே ! ஆகாஷ் தன்னைத்தானே நொந்து கொண்டான். அப்போது ரஞ்சித் உள்ளே நுழைத்து '' உங்கள உங்கட அம்மா கூப்பிடுறா '' என்றான். ஆகாஷ் விடைபெறுவதற்காக நந்தினியின் கண்களைப் பார்த்தான். அவளது விழிகள் அவனைக் கேட்டன. '' நீயும் வெளிநாட்டில் இருந்து வந்து வெறும் சொக்கிளேற்றோடு செல்கிறாய் – எனது வறுமை உனது கண்களுக்குத் தெரியவில்லையா? ''

ஆகாஷ் தலைகுனிந்தான். '' பின்னர் நந்தினி நான் போயிட்டு வாறன் '' என்று விடைபெற்று வெளியேறினான்.

இப்போது தர்மண்ணையின் மறைவு அவன் இதயத்தை நிரப்பவில்லை. நந்தினியின் சோகம் மட்டுமே பரவி இருந்தது. தனது வீட்டுக்குள் நுழைந்தான். வாசலில் தாயார் '' அதுகள் வாற நேரமாச்சு நீ எங்க உதுவளிய திரிஞ்சி போட்டு வாறாய்? ''

'' அம்மா வாறாக்களுக்குப் போய் சொல்லுங்கோ வரவேண்டாம் எண்டு ''

'' ஏன் உனக்கென்ன விசர் பிடிச்சிட்டுதே ''

'' இவ்வளவு நாளும் பிடிச்சித்தான் இருந்தது. இப்பத்தான் தெளிஞ்சிருக்குது. ''

'' அப்ப உனக்கென்ன கலியாணம் வேண்டாமே '' தாயையும் தகப்பனையும் நன்றாக உற்றுப் பார்த்தான் ஆகாஷ். அவனது அந்தப் பார்வையில் நிறையவே உறுதி தெரிந்தது. பின்னர் தாயைப் பார்த்து

அம்மா ! கலியாணம் கட்டத்தான் போறன் ஆனால் ஒரு சின்ன மாறுதல் பக்கத்து வீட்டுல இருக்கிறாள் நந்தினி !! அவளத்தான் கட்டப் போறன்

லட்சுமி அம்மாள் இடிந்து போனாள்.

பொன்னம்பலத்தார் மெதுவாக புன்னகைத்தார்.

வாழ்வில் ஒரு மகத்தான பொழுது புலருகின்றதான எண்ணம் மேலோங்கி நின்றது அவனுக்கு.

❖❖❖

*வியாபாரத்துக்கு அழகு*
*விளம்பரம் செய்தல்*
*நீங்களும் இந்தப் பத்திரிகையில்*
*விளம்பரம் செய்து*
*பயனடையுங்கள்*

*குருப் பெயர்ச்சிப்*
*பலன்களை*
*அடுத்த மாதத்தில்*
*எதிர்பாருங்கள்*

# திருப்பம்

விமானம் தரை இறங்கியது. திருப்பதி இறைவனை மனதில் நினைத்தபடி விமானத்தை விட்டு இறங்கினேன். உள்மனதில் ஒரு பாரம். திருப்பதியை அடையும் வரை அந்தப் பாரத்தை இறக்குவது சாத்தியமில்லை என்பதை நான் அறிவேன்.

ஒரே ஒரு ஸ்போட்ஸ் பாக்கை மட்டும் கொண்டு வந்த என்னைப் பார்த்து சுங்க அதிகாரி ஆச்சரியத்துடன் வேறு பாக் இல்லையா எனக் கேட்டார். மனதில் பாரத்துடன் வந்த எனக்குக் கையில் அதிக பாரம் இருக்கவில்லை. மீனம்பாக்கம் விமான நிலையத்துக்குள்ளேயே டாக்ஸி பதிவு செய்யும் வசதி இருந்தது. கலாக்ஷேத்திராவுக்குப் போவதற்கு டாக்ஸி ஒன்று கேட்டேன். கொடுப்பதற்கு பொக்கட்டுக்குள் கையை விட்டபோது பேர்ஸ் பொக்கட்டுக்குள் இருக்கவில்லை. எனக்கு அதிர்ச்சியாக இருந்தது.

என்னுடைய இக்கட்டான நிலையை அவதானித்தப் பின் எனக்கு விமானத்தில் பேச்சுத் துணையாக இருந்த சக பயணியொருத்தி தன்னிடமிருந்த நூறு ரூபாய் பணத்தை தந்துவிட்டு என்னுடைய நன்றிக்குக் கூட காத்திராமல் சென்றாள். முன்னொரு தடவை நான் காசை தொலைத்ததால் '' மறதி மங்கப்பன் '' என்று ஒரு பெண் சிறு வயதில் அழைத்ததும் அதை நான் என் பாடசாலை ஆசிரியையிடம் சொல்லி அழுததும் என் ஞாபகத்தில் வந்தது. காலங்கள் வேகமாக உருண்டோடி விட்டன.

எனக்கருகில் ஒரு ரக்ஸி வந்து நின்றது. அய்யா வெளி நாட்டிலிருந்தா வருகிறீர்கள் என்று மதுரைத் தமிழில் அழகாக டாக்ஸி டிரைவர் நான் ஆம் என்று கூறியபடி காரில் ஏறினேன். அதிகாலை வேளை கார் வானொலியில் சுப்ரபாதம் ஒலித்தது. எனக்கு உதவிய பெண்ணின் முகவரியைக் கேட்டிருந்தால் பாங்கில் பணம் எடுத்தபின் அனுப்பலாம். ஆனால் அவளோ புயலைப் போல் வேகமாகச் சென்றுவிட்டாள். அவளைப் பொறுத்தவரை நூறு ரூபாய் பெரிய தொகை என்பதை நான் அறிவேன். அதனால் தான் என் மனம் குழப்பத்தில் ஆழ்ந்தது.

ரக்ஸி கலாக்ஷேத்திராவை அடைந்தது. காலை நேரம் காற்று இதமாக வீசியது. ருக்மணி தேவியின் கலைக் கோயில் என்னை வரவேற்றது. எனினும், முதலில் அருகில் இருந்த பிள்ளையார் கோயிலுக்குச் சென்று தேங்காயை உடைத்து வணங்கினேன். உண்டியலில் பணத்தைப் போட்டேன். பின்னர் கோயிலில் சற்று ஓய்வெடுத்தேன். அன்று விநாயகர் சதுர்த்தி. ஆகவே கோயிலில் பிரசாதங்கள் வழங்கப்பட்டன. மோதகத்தை வாயில் வைத்தபோது அண்ணா தர்மம் போடுங்கள் என்ற குரல் கேட்டது. என்னை உரிமையுடன் அண்ணா என்று கூப்பிட்ட அந்தப் பெண்ணை நோக்கினேன். மெலிந்த உடல், அழுக்குப் படிந்த தலைமயிர், மாநிறம். என்னுடைய பொக்கட்டுக்குள் ஒரு ரூபாய் நாணயம்தான் இருந்தது. அதை போட்டேன். அவள் நீங்களும் உங்கள் மனைவியும் சந்தோஷமாக இருக்கவேண்டும் என்றாள். பிச்சையெடுத்த வறியவர்களின் தட்டிலும் பிரசாதம் இடப்பட்டது.

கோயிலை விட்டு வெளியே வந்தேன். கலாக்ஷேத்திராவை நோக்கி நடக்க ஆரம்பித்தேன். அவள் அண்ணா என்று அழைத்தபின் எனது மனதின் பாரம் குறைய ஆரம்பித்ததை உணரத் தொடங்கினேன். நடந்து சென்ற என்னைக் கடந்து வேகமாக ஒரு பென்ஸ் கார் சென்றது. சிறிது நேரத்தில் பென்ஸ் ரிவேஸ் பண்ணியபடி என்னை நோக்கி வந்தது. பென்ஸின் கறுப்பு நிறக்கண்ணாடிகளினால் யார் உள்ளே இருக்கிறார் என்று என்னால் உணர முடியவில்லை. காரின் கண்ணாடி மெதுவாகப் பதிகப்பட கார் ஓட்டிவந்த பெண்ணை பார்த்தேன். என் தலை சுற்றியது.

விதியின் விளையாட்டில் பகடைக்காய்கள் மாந்தர்கள். இன்று என் கதையில் ஒரு சுபமான முடிவு. காரில் இருந்த பெண் நீண்ட காலத்துக்கு முன் பிரிந்த என்னுடைய காதலி. அவளை ஒரு தடவையாவது பார்க்க வேண்டும் என்னும் விண்ணப்பத்துடன் திருப்பதி ஆண்டவனிடம் போகின்ற வேளை கும்பிடப் போன தெய்வமே குறுக்கே வந்தது. காரில் ஏறினேன். என்னால் எதுவும் பேச முடியவில்லை. அவளும் வழக்கம்போல் மௌனமாக இருந்தாள். கார் வேகமாக ஓடியது. பத்து நிமிட மௌனங்களின் பின் அவள் முதலில் கதைத்தாள். எங்கிருந்து வருகிறீர்கள் ! கேள்வி அவளிடம் இருந்து வந்தது. சுவீடனிலிருந்து என்று பதிலளித்தேன். நானும் அவளிடம் அதே கேள்வியைக் கேட்டேன். அவள் தான் சிலோனில் இருந்து வருகிறேன் என்றாள்.

இருவரும் சிரித்தோம். அவள் ஏன் சிரித்தாள் என்று நான் முதலில் கேட்டேன். என்னிடம் ஒரே ஒரு ஸ்போட்ஸ் பாக் இருந்தமையால் நான் பொய் சொல்கிறேன் என்று தான் நினைத்ததாகக் கூறினாள். பாக்கைத் திறந்து அவள் எனக்கு காதற் பரிசாக தந்த அவளுடைய டயரியை அவளிடமே திரும்பக் கொடுத்தேன். நான் ஏன் சிரித்தேன் என்று அவள் கேட்டாள். கலா க்ஷேத்திராவின் அருகில்தான் அவள் இருக்கிறாள் என்று என்னுடைய சிறு வயது நண்பன் சேரன் கூறினான். அவன் சொல்லும் கதைகள் வழமையாக உண்மையாக இருப்பதில்லை. எனினும் கடைசி முயற்சியாக திருப்பதி போக முதலில் கலாக்ஷேத்திராவுக்கு வந்தேன். அவளைச் சந்தித்தபோது நண்பன் கூறியது உண்மை என்று நினைக்கையில் அவளோ தான் சிலோனில் இருந்து வருகிறேன் என்று கூறியதால் அவள் என்னுடன் பகடி விடுகிறாள் என நினைத்து நான் சிரித்தேன் என்று கூறினேன்.

அவளின் கண்கள் குளமாயின. ஈழத்துப் போரில் சொந்தங்களை இழந்த அவள் அனாதை இல்லமொன்றில் வளர்க்கப்பட்டாள். தன்னுடைய கடின உழைப்பால் பொறியியலாளராகிய பின் இந்தியாவுக்குப் புலம்பெயர்ந்து வருகிறாள் என்று கூறினாள். தான் ஒரு வருடத்துக்கு முதலே வந்து கலாக்ஷேத்திராவின் அருகில் வீடு ஒன்றை வாங்கியபின் நான் ஈழத்தில்தான் வாழ்கிறேன் என்று யாரோ சொன்னதால் மீண்டும் திரிகோணமலைக்குச் சென்றேன் என்று கூறினாள். நேற்று நீங்கள் எனக்குக் கடைசியாகக் கூறிய வசனங்கள் நினைவில் வந்தன. எந்த நிலை வந்தாலும் என்னை நீ தேடாதே. நீ என்னுள் நிறைந்தவள். நானே உன்னைத் தேடி வருவேன் என்பதும்.எம்மை இணைத்தது விநாயகர் சதுர்த்தி நாள் என்று நான் அடிக்கடி கூறுவதும் நினைவில் வர, தான் புறப்பட்டேன் என்றாள். சிறுவயதில் என்னைத் தவிர யாரையும் தான்

**கனக ஈஸ்வர குமார்**

மணமுடிக்க மாட்டேன் என்று என்கையில் அவள் சத்தியமடித்தது என்னுடைய மனக்கண்ணில் வந்தது.

சில நிமிட மௌனங்களின் பின் என்னை நீங்கள் ஏன் தேடவில்லை என்று ஆவேசத்துடன் கேட்டாள். நான் உன் நினைவுடனே வாழும்போது உன்னைத் தேடவில்லை என்ற பேச்சுக்கு அர்த்தமில்லை என்றேன். மனதில் பதினைந்து ஆண்டுகளாக இருந்த ஏக்கங்களை, கோபங்களை வெளிப்படுத்துகிறாள் என்பதை என்னால் உணர முடிந்தது.

என்னால் அவளைப் போல் ஆத்திரடப்பட முடியவில்லை. அதற்கு மாறாக ஆனந்தமே வந்தது. என் மனதின் பாரங்களும் நீங்கிவிட்டன. காரினைத் திருப்பதியை நோக்கி ஓட்டு என்று கூறியபடி திருப்பதிக்குரிய ரோடுகளின் வரைபடத்தைப் பாக்கிலிருந்து எடுத்தேன். நான் பாதைகளைச் சொல்ல அவள் காரை ஓட்டினாள்.

அவளிடம் என் வாழ்வில் நிகழ்ந்த சம்பவங்களைப் பற்றிக் கூறத் தொடங்கினேன். ஆடிக்கலவரம் நிகழ்ந்த பின் அம்மாவின் சொல்லைத் தட்டமுடியாதவனாகவும், உனக்கும் எனக்கும் உள்ள காதலைச் சொல்ல துணிவற்ற கோழையாகவும் சுவீடனுக்கு புறப்பட்டேன். விமானத்திற்குள் ஒரு சிறு குழந்தைபோல் அழுத என்னைப் பலர் வேடிக்கைப் பார்த்தனர். சுவீடன் மண்ணில் காலடி வைத்தபின் மேற்குலகத்தின் இயந்திர வாழ்க்கைக்குள் என்னையும் இணைத்துக் கொண்டாலும், அல்லும் பகலும் தாயகத்தில் நீ எங்கிருக்கிறாய் என்று ஏங்குவேன். சாட்சிகளற்ற நம் காதலுக்குப் பாலம் கட்டுவது இலகுவாக இருக்கவில்லை. எனினும் என் மனதில் பிள்ளையாரின் சந்நிதியில் ஆரம்பித்த எங்கள் காதல் கைகூடும் என்ற நம்பிக்கை இருந்தது. அந்த நம்பிக்கைதான் எம்மை இணைத்தது என்று கூறி முடித்தேன்.

நீண்ட பயணத்தின் பின் திருப்பதிக்கு அருகே ஒரு வங்கி அருகே காரை நிறுத்தும்படி கூறினேன். பாக்குள் மீண்டும் வீதி வரைபடங்களை நான் வைத்தபோது எனக்கு நூறு ரூபாய் தந்த பெண் என்னிடம் இரவல் வாங்கிப் படித்த ஸ்போட்ஸ் மகசினுக்குள் ஒரு பேப்பர் இருந்ததை என் காதலி சுமா அவதானித்தாள். அதை வெளியே எடுத்தாள். நானும் சுமாவும் அதில் எழுதியிருந்த கவிதையை வாசித்தோம்.

'' நிதானமற்ற காதல்கள் தோற்பது உண்டு.
சந்நிதான காதல்கள் தோற்பதில்லை ''

அந்தப் பெண் ஒரு புகழ்பெற்ற எழுத்தாளர் என்பதை அக்கவிதை உணர்த்தியது. பேப்பரில் அச்சடிக்கப்பட்டிருந்த அவளின் விலாசத்தினையும், தொலைபேசி இலக்கத்தையும் எனது டயரியில் எழுதியபின் இருவரும் வங்கிக்கு சென்று பணத்தை எடுத்தோம். பின் அருகிலிருந்த தபாற் கந்தோருக்கு சென்று அந்தப் பெண்ணின் விலாசத்தக்கு நூறு ரூபாய்க்குரிய மணி ஓடரை அனுப்பினேன். எங்கள் பயணத்தைத் தொடர்ந்தோம்.

திருப்பதி ஆலயத்தின் அழகு கண்களில் நிறைந்திட இருவரும் மன நிறைவுடன் இறைவனைக் கும்பிட்டோம். கோயிலில் இருந்து சுமாவின் கைத் தொலைபேசி லம் என்னுடன் பயணம் செய்த அந்தப் பெண்ணைத் தொடர்பு கொண்டேன். எங்கள் காதல் கதையைப் பற்றி நான் பயணத்தின்போது கூறியிருந்ததால் சுமாவும் நானும் இணைந்ததைக் கூறியபோது அவள் பெருமகிழ்ச்சி அடைந்தாள். அவள் தான் ஒரு புகழ் பெற்ற எழுத்தாளர் என்பதை எமக்குக் கூறிய பின் திருப்பதியிலிருந்து வரும்போது தஞ்சாவூரில் தனது வீட்டில் எமது திருமணத்தை வைக்கவேண்டும் என்று அன்புடன் வேண்டுகோள் விடுத்தாள். இருவரும் சம்மதித்தோம்.

திருப்பதி சென்றால் வாழ்வில் ஒரு திருப்பம் வரும் என்பது உண்மைதான் என்று சுமா மெல்ல என் காதில் முணுமுணுத்தாள்.

## மது !

**மரணத்துக்குப்பின்**
**எங்கு செல்வீர்**
**என்றா கேட்கிறீர்?**
**முதலில் மது கொண்டுவா !**
**பிறகு**
**எங்கு விருப்பமோ**
**அங்கு போ !**

**– உமர்கையாம்**

## ஒழுகை

**மக்கள் வரிசையாக நிற்பதை**
**' கியூ ' என்கிறோம். சங்க**
**காலத்தில் இதனை ' ஒழுகை '**
**என்று கூறியுள்ளார்கள்**
**' ஒழுக்கு ' என்பதிலிருந்து**
**தோன்றியது இந்த ஒழுகை**

**– மஞ்சரி**

# அம்மனை சரண் அடைந்தால்
# அதிக வரம் பெறலாம்







அம்பாள் துணை

## மேற்கு இலண்டன் ஈலிங் அருள் ஸ்ரீ கனக துர்க்கை அம்மன் ஆலய
## பஞ்ச விம்சதி தின வருடாந்த மகோற்சவ விஞ்ஞாபனம்
## ஸ்ரீ தாரண வருடம் - 2004

**கொடியேற்றம் :- 10.07.2004 வெள்ளிக் கிழமை பகல் 10.30**

**இரதோற்சவம்(தேர்):08.08.2004ஞாயிற்றுக்கிழமை காலை 10.00 - மதியம் 12.00**

**காலை 10.30 மணிக்கு அம்பாள் எழுந்தருள்வாள்**

அம்பிகை அடியார்களே

ப்ருகதாரணிய ஷேத்திரம் என்றும் சாக சாலுமகை தீபம் என்றும் சொர்ணபூமி என்றும் ஆன்றோர்களால் போற்றப்படும் சகல வளங்களும் நிறைந்து விளங்கும் லண்டன் மாநகரில் ஈலிங் பகுதியில் கோயில் கொண்டு கருணையே வடிவாகி வீற்றிருக்கும் ஸ்ரீ கனக துர்க்கை அம்மனின் வருடாந்த ப்ரமோற்சவ விழா நிகழும் மங்களகரமான தாரண வருடம் ஆடி மாதம் 1ம் நாள் (10.07.2004) வெள்ளிக் கிழமை பகல் 10.30 மணிக்கு கொடியேற்ற வைபவத்துடன் ஆரம்பமாகி 25 தினங்களும் காலை மாலை விழாக்கள் சிறப்புற நடைபெறத் திருவருள் பாலித்துள்ளது. அந்நாட்களில் தினமும் வந்து அம்பிகையை தரிசனம் செய்து அருள் பெற்றுய்யுமாறு வேண்டுகிறோம்.

# அதி உயர் பயங்கரவாத அமெரிக்கா

உதயன் யாழ், தினசரியின் ஆசிரியத் தலையங்கம்

சர்வதேசப் பொலீஸ்காரனாகத் தன்னை வரித்துக்கொண்டு,

தங்களின் நியாயமான அபிலாஷைகளுக்காகவும், இருப்புக்கான வாழ்வியல் உரிமைகளுக்காகவும் போராடி வரும் இனமக்களை ' பயங்கரவாதிகள் ' என்று பட்டம் சூட்டி, தீவிரவாதிகள் என்று சித்தரித்துக்கொண்டு –

உலகையே தனது வல்லாதிக்கத்தால் அடிமைப்படுத்த முயலும் அமெரிக்காவின் சுதந்திரதினம் இன்றாகும்.

இந்தச் சந்தர்ப்பத்தில்–

மனித உரிமைகளினதும், சுதந்திரத்தினதும் காவலனாகத் தன்னைக் காட்டிக்கொள்ளும் அமெரிக்கா, சுதந்திரத்துக்காகவும் நியாயமான உரிமைகளுக்காகவும் இரத்தம் சிந்திப் போராடிக்கொண்டிருக்கும் நமது ஈழத்தமிழினம் குறித்து என்ன கருத்துக்கொண்டிருக்கின்றது என்பதை நோக்குவது சாலப்பொருத்தமானதாகும்.

பாரம்பரியமாகவும், காலங்காலமாகவும், பூர்வீகமாகவும் தாம் வாழ்ந்த தாயகப் பூமியுடனான அவர்களின் பிணைப்பும், ஒட்டுதலும் சில தலைமுறைத் தொடர்புடையதல்ல. அது பல்லாயிரம் ஆண்டுகளாக வழிவழியாக வந்தது. இந்த மண்ணின் சரிதமும் அவர்களின் சந்ததிப் பிணைப்பும் பிரிக்க முடியாதவை. தமது மொழியும், இனமும், தாயகமும் கபளீகரம் செய்யப்படுபவதிலிருந்து அவற்றைக் காப்பாற்றவும், தமது இனத்தின் தனித்துவத்தைப் பேணவுமே அவர்கள் தமது உயிரையும் ஈகம்செய்து ஆயுதம் ஏந்திப் போராடுகின்றார்கள்.

இந்தத் தாயகத்துக்கும் – புவியியல் ரீதியான வாழ்வியல் பிரதேசத்துக்கும் – உயிர்வாழ்க்கைக்கும் உள்ள அந்த அர்த்தம் பொதிந்த இணைப்பை – பிணைப்பை – ஒட்டுறவை ஈழத்தமிழர்கள் புரிந்துகொண்டமாதிரி – உணர்ந்து கொண்டது போல் – அமெரிக்கர்கள் அனுபவத்தில் உணர்ந்து, புரிந்து கொண்டிருக்கமாட்டார்கள் என்பது உண்மையே.

ஏனெனில், அவர்களின் வாழ்க்கைச் சரிதத்தைச் சற்று பின்னோக்கிப் புரட்டிப்பார்ப்பவர்களுக்கு, அவர்கள் இன்று தமது மண், தமது தாயகம், தமது தேசம் என்று பீற்றும் அந்த நாட்டுக்கும் அவர்களது முன்னோர்களான பழைய சந்ததிக்கும் உள்ள தொடர்பு ஆகக்கூடியது ஐந்து நூற்றாண்டுகள் தாம் என்பது புலனாகும்.

கொலம்பஸ் அமெரிக்காவைக் கண்டுபிடித்த பின்னர், பல்வேறு திசைகளிலிருந்தும் – பல்வேறு நாடுகளிலிருந்தும் – தேசாந்திரம் தேடிவந்து, அந்த மண்ணில் குடியேறிய பல்வேறு இன, மத மக்கள் கூட்டத்தினரே அந்த மண்ணை இன்று தமது தாய்நாடு என்று ஏற்றிப்போற்றிக்கொண்டு ' சுதந்திரம் ' ' தாயகம் ' பற்றியெல்லாம் புதிய இலக்கணங்கள் கூறிக்கொண்டிருக்கின்றார்கள்.

மண்ணுக்கும், அந்த மண்ணைக் காலங்காலமாகத் தம் தாயகமாகக் கொண்டமைந்த மக்கள் கூட்டத்திற்கும் இடையில் இருக்கக்கூடிய உயிர்ப்பிணைப்பு, வந்தேறு குடிகளின் வழிவழியாக வருபவர்களுக்கு எங்கே புரியப்போகின்றது.

இலங்கையில் ஈழத்தமிழர்களுக்காகப் போராடுபவர்கள் புலிகள். தமிழ் மக்கள் தமது ஏகப்பிரதிநிதிகள் விடுதலைப்புலிகளே என்பதை ஜனநாயக முறையிலான தேர்தலின் மூலமும் சர்வதேச உலகுக்கு நிரூபித்திருக்கின்றார்கள். ஆனாலும், ஈழத்தமிழர்களின் அதிகாரப்பூர்வ – சட்ட ரீதியான – தார்மீக வழியிலான – பிரதிநிதிகளான விடுதலைப்புலிகளைப் பயங்கரவாதிகள் பட்டம் சூட்டியுள்ள அமெரிக்கா, அந்தப் பட்டியலிலிருந்து அவர்களை நீக்கமுடியாது என்றும் அறிவித்திருக்கின்றது.

அமெரிக்கப் பிரதிநிதி இராஜாங்க அமைச்சர் கிறிஸ்ரினா ரொக்கா அண்மையில் அமெரிக்க காங்கிரஸ்குழு முன்னிலையில் இவ்விவகாரம் குறித்து விளக்கம் அளித்திருக்கின்றார்.

விடுதலைப் புலிகள் பயங்கரவாதச் செயல்களைக் கைவிடுவதைச் சொல்லிலும், செயலிலும் உறுதிப்படுத்தும் வரை அவர்களைத் தமது பயங்கரவாத அமைப்புகளின் பட்டியலிலிருந்து நீக்கமுடியாது என்ற அமெரிக்காவின் அடம்பிடிப்பை அவர் பிரதிபலித்தார்.

புலிகளைப் பொறுத்தவரை அவர்கள் முள்ளை முள்ளால் எடுக்கின்றனர் என்பதை இப்பகுதியில் ஏற்கனவே சில தினங்களுக்கு முன்னர் சுட்டிக்காட்டியிருந்தோம். அவர்களுக்கு வேறுவழியில்லை. அடக்குமுறையிலிருந்து, அரச பயங்கர வாதத்திலிருந்து தமது இனத்தைக் காப்பதற்கும், மீட்பதற்கும், தாயகத்தில் நிலைகொண்டிருப்பதற்கும் அவர்களுக்கு வேறு மார்க்கமில்லை.

ஆனால் ' சட்டியைப் பார்த்து பானை கறுப்பு என்றதாம்' என்பது போல புலிகளைப்பார்த்து தங்களை தூயவர்களாகக் கருதிக்கொள்ளும் அமெரிக்கர்கள் பயங்கரவாதிகள் என்கின்றனர்.

சர்வதேச ரீதியில் – உலகளாவிய ரீதியில் – பயங்கரவாதத்தை பலஸ்தீனத்திலும், ஆப்கானிஸ்தானிலும், ஈராக்கிலும் கட்டவிழ்த்துவிட்டு வேடிக்கைபார்க்கும் அமெரிக்கா, நம்மவரைப் பார்த்து ' பயங்கரவாதி ' என்று எள்ளி நகையாடுவது வேடிக்கையிலும் வேடிக்கை.

ஈராக் அபு–கிறைப் சிறையில் அமெரிக்க இராணுவம் நடந்துகொண்டவிதம் ஒன்றே அதன் ' பயங்கரவாதச் ' சாதனைக்கு சான்றிதழாகப் போதுமானது.

கியூபாவின் ஓரத்தில் குவாண்டனாமோ குடாவில் பல நாடுகளையும் சேர்ந்த 595 பேரை " பயங்கரக் குற்றவாளிகள் " என்று பொய்ப்பிரசார முலாம் பூசிக்கொண்டு தடுத்துவைத்திருக்கும் அமெரிக்கா, செஞ்சிலுவைச் சர்வதேசக் குழு அதிகாரிகள்கூட – அவர்களுக்குரிய சர்வதேச சட்ட நியதிகளுக்கு அமைவாக – அந்தக் கைதிகளின் தடுப்புக் காவல் நிலையத்துக்கு விஜயஞ்செய்து அவர்களை நேரில் சந்திக்கும் கடப்பாட்டை நிறைவேற்றவிடாமல் – அந்தக் கைதிகளை நெருங்க விடாமல் தடுத்து – 'பயங்கரவாதம்' புரிந்துவருகின்றது.

இவ்வாறு ஒருபுறம் சர்வதேச மட்டத்தில் பல்வேறு குழப்பங்களுக்கும், அழிவுகளுக்கும், நியாயபூர்வமற்ற ஆக்கிரமிப்புகளுக்கும் காரணமான பயங்கரவாதத்தை புரிந்துகொண்டு – மறுபுறத்தில் விடுதலைப் புலிகள், பாலஸ்தீன விடுதலைப்போராளிகள் போன்றவர்களைப் 'பயங்கரவாதிகள்' என்று அமெரிக்கா பட்டம் சூட்டுவது நகைப்புக்கிடமானது.



Voice Telecom
international calling cards...
for Asia
<<< and other parts of the world
<<< Europe and U.S.A.
<<< for all parts of Africa
<<< Middle East
<<< Eastern Europe
and for Sri Lanka >>>
SALES ENQUIRY
CANADA 416 285 9758
DENMARK 86 70 17 67
FRANCE 08 05 30 05 20
GERMANY 069 2400 7860
NETHERLANDS 0800 020 1631
NORWAY 800 58 180
PORTUGAL (0034) 91 291 0096
SPAIN 901 666 052
SWEDEN 020 1401 162
UK 0800 635 6 635
www.voicetelecom.com
... your link to the world
NO line rental.... NO hidden charges.... NO calling cards
VOICE-DIRECT HOME ACCOUNT
...the convenient option for calling anywhere you want... from your home... or where ever you are with....
to open an account just DIAL....
0800 519 4 519
OR 0207 177 22 00
YOU CAN ALSO OPEN AN ACCOUNT ONLINE BY VISITING OUR WEBSITE:
www.voice-direct.com

# ஈழத் தமிழரின் இலண்டன் வாழ்வு

– இளைய அப்துல்லாஹ்

லண்டனில் ஒரு பிரமுகரைச் சந்திக்கும் பொழுது சொன்னார் தம்பி இப்ப எதுக்கும் காசு சேக்க முடியாமல் இருக்கு பாத்தம் சரிவராது ஒரு கோயிலைத் திறந்திட்டம் ஆலயங்கள் தொடர்பான அவநம்பிக்கை தொடர்ந்த வண்ணம் இருக்கின்றன.

லண்டன் தெருக்களில் EASTHAM, ILFORD, WIMBILDON, HARROW, AIPERTON, WEMBLEY, ARCHWAY, LOWSHIYAM, WALTHAMSTOW என்று இலங்கைத் தமிழர்கள் கூடி வாழும் ஊர்களில் கோயில்கள் பல அடிக்கடி முளைக்கும். ஒரு கோயிலின் தர்மகர்த்தாவோடு சண்டை பிடித்துப் போய் பிரியும் ஐயர் இன்னொரு கோவிலை பிரதிஷ்டை செய்வார்.

கட்சிகளின் பெயர்கள் போல கோவில்களின் பெயர்களும் வைக்கப் படும். உதாரணமாக தி.மு.க. பிரிந்து அ.தி.மு.க போல... அநேகமாகக் கோவில்களில் ஐயர்மாருக்கு உரிய வேதனம் சொடுக்கப்படுவதில்லை. ஆலயத்தை மட்டும் நம்பி இலங்கையில் இருந்து செல்லும் ஐயர்மாருக்கு தங்குமிடம், விசா, உணவு என்று கொடுத்து விட்டு இலங்கை ரூபாய்ப்படி சம்பளம் கொடுப்பதாகவும் ஒரு ஐயர் வருத்தப்பட்டார்.

கோயில்கள் மக்களின் மன அமைதியைத் தரும் ஞானாலயங்களாக கருதப்பட்ட காலங்கள் போய் இப்பொழுது வருமானம் தரும் பணப்புழக்கமுள்ள இடங்களாக மாறியிருக்கின்றன. லண்டனில் மட்டும் இருபதுக்கும் மேற்பட்ட கோவில்கள் பணம் கொழிக்கும் இடங்களாக இருக்கின்றன. கோவில்களிடையே சண்டைகள் மிகவும் பிரபலம்.

ஒரு வேளை கோவில்கள் சேர்ந்து ஒரு திதியை அறிவிக்கும். ஏனைய கோவில்கள் மற்றொரு நாளில் அந்த அனுஷ்டானங்களை மேற்கொள்ளும். தைப்பொங்கல், தீபாவளி போன்ற விடயங்கள் சித்திரை வருடப் பிறப்பு, அமாவாசை, பௌர்ணமி கூட சில நேரம் கோவில்களுக்கிடையில் மாறுபடும் சண்டையாக மாறிவிடும்.

கோவில்கள் சைவரின் அடையாளங்களாகவும், ஆத்ம விமோசன தலங்களாகவும் இருக்க வேண்டியவை வெறும் சண்டை சச்சரவுக்குரிய இடங்களாக இருப்பது கண்டு சைவர்கள் மிகவும் நொந்துபோயுள்ளனர்.

இந்தியக் கோயில்களில் கருத்துக் கணிப்பு, நேரக்கணிப்பு இலங்கை கோவில்களின் நேரக் கணிப்பு என்று இரண்டு வகைக் குழப்பங்களையும் லண்டனில் காணக்கூடியதாக இருக்கும்.

திருக்கணிதப் பஞ்சாங்கம், வாக்கிய பஞ்சாங்கம் என்ற பிரிவுகள் பெரும் பிரச்சினைகளையும் குழப்பங்களையும் ஏற்படுத்துபனவாக இருக்கின்றன.

திருக்கணிதப் பஞ்சாங்கத்தை பின்பற்றுகிறவர்கள் ஒரு நாளும், வாக்கிய பஞ்சாங்கத்தைப் பின்பற்றுபவர்கள் இன்னொரு நாளும், விசேஷ தினங்களை பங்கு போடும் பொழுது பொது மக்கள் பாவம் குழம்பிப் போய் நிற்கின்றனர்.

சைவத் திருக்கோவில் ஒன்றியம் என்ற ஒன்று இப்பொழுது பல மாநாடுகளை நடத்தி வருகின்றது. ஆனால் இந்த சைவத் திருக்கோவில் ஒன்றியத்தினால் கூட எல்லாத் திருக் கோவில்களையும் ஒன்றிணைக்க முடியவில்லை.

ஏன் என்று அதன் தலைவரைக் கேட்டால் போய் இணையாத கோவில்களைக் கேளுங்கள் என்கிறார். இணையாத கோவில்களை வினவினால் சைவத் திருக்கோவில் ஒன்றியத்திடம் நம்பிக்கை யின்மையைத் தெரிவிக்கின்றன. இந்நிலையில், நம்பிக்கையும் சமூக அக்கறையும் இளைஞர்கள் மீது கரிசனையும் வைக்க வேண்டிய சமய நிறுவனங்கள் தங்களிடையேயுள்ள குடுமி பிடி சண்டையை தீர்ப்பதற்கே நேரமில்லாமல் அலைகின்றன.

புகலிடத் தமிழர்கள் பற்றிய அக்கரையை அல்லது அவர்கள் மீதான கரிசனையை அங்குள்ள ஊடகங்கள் வெளிப்படுத்துகின்ற போதும் பொது அமைப்புகள் பாராமுகம் காட்டுகின்றன.

யோகாசனம் பயிற்றுவித்தல், பிரசங்கங்களுக்கு ஆட்களை இலங்கையில் இருந்து அழைப்பித்தல் போன்ற விடயங்களோடு ஐந்து கால நைவேத்தியங்களுடனான பூஜைகளுக்கு கொடுக்கின்ற முக்கியத்துவம் இளைஞர்கள் மீது காட்டப்படுவதில்லை.

அதனால் இளைஞர்கள் வழிதவறியவர்களாக ஆகி விட்டார்கள். METTO POLITON POLICE பத்திரிகயைாளர்களையும் ஊடகவியலாளர்களையும் அழைத்துத் தமிழ் இளைஞர்கள் பயன்படுத்திய சாமுராய் வாள்களையும், கிறிஸ் கத்திகளையும் கைத்துப்பாக்கிகளையும் ஆயிரக்கணக்கான கள்ளமான முறையில் தயாரிக்கப்பட்ட கிறடிட் கார்டுகளையும் காட்டியது.

அவற்றைப் பார்த்த பிறகாவது சமூக அமைப்புகள் இளையவர்கள் மீது அக்கறை செலுத்தினவா என்றால் இல்லை.

இங்கு ஊரில் ஒரு பையன் கெட்டவனாக மாறுகிறான் என்றால், சமூகத்தின் கண் அவன் மீது வெறுப்பையுமிழும். லண்டனில் அவனைப் பார்த்து பெருமை பேசுகின்றனர். அதனால் அவன் இன்னும் அலைகழிந்து போகின்றான்.

முழுக்க முழுக்கத் தமிழர் சமூக அமைப்புகளின் அக்கறையின்மை இவற்றிற்குக் காரணம். பணம் பறித்தல் அல்லது கிறடிட் கார்ட் தொடர்பாக... கணினியை வெகு இலாவகமாகப் பயன்படுத்தத் தெரிந்த தமிழ் இளைஞர்கள் கடன் அட்டைகளைத் தாங்களே செய்கிறார்கள். இது கிரிமினல் குற்றமாகும்.

அண்மையில் ஒரு செய்தி ; கிறடிட் கார்டுகளைப் பயன்படுத்தி பணம் எடுக்கும் மெசின்கள் லண்டனில் பார்க்குமிடமெல்லாம் இருக்கும். தமிழ் மக்கள் செறிந்து வாழும் ஒரு இடத்தில் மெசின் ஒன்றின் உட்பக்கமாக நுண்ணிய கமராவைப் பொருத்தி கார்டை உட்செலுத்தும் போது கார்டின் நம்பரையும் – இரகசிய பின் நம்பரையும் கமரா லமாக களவாடி அதேபோல் புதிய நகல் ஒன்றை செய்து பணம் முழுவதையும் எடுத்து விட்டார்கள் தமிழர்கள். இன்னொரு சம்பவம் "South Hall" பகுதி ; தமிழர்கள் நிறைந்து வாழும் இடங்களில் ஒன்று, ஒரு தமிழ் தாதி இரவு 11.30 அளவில் வேலை முடிந்து வரும் பொழுது அவரை அள்ளி காரில் திணித்து விட்டு அவரிடம் இருந்த கிறடிட் கார்டுகள் இரண்டினை அபகரித்து இரவு 11.30ற்கு 1000 பவுண்கள் எடுத்து விட்டு பின்பு அவரை அப்படியே காரில் வைத்து அழுத்திப் பிடித்து அதிகாலை 12.10ற்கு மேலும் 1000 பவுண்களை கார்டில் இருந்து எடுத்துவிட்டு அந்தத் தாதியை நட்ட நடு ரோட்டில் விட்டுவிட்டு சென்றுவிட்டார்கள்.

லண்டனில் ஒரு நாளைக்கு 500 பவுண்கள் (Card) கார்டில் எடுக்க முடியும். தாதியும் தமிழ், களவெடுத்தவர்கள் அல்லது அபகரித்தவர்கள் தமிழர்கள். இது உதாரணத்திற்கான இரண்டு சம்பவங்கள். இப்படிப் பல வன்முறைகளில் ஈடுபடும் தமிழ் இளைஞர்களின் செயல்களைப் பார்க்கிறோம்.

இது தமிழர் மீதான இங்கிலாந்து அரசாங்கத்தின் நெருக்கடியை அதிகப்படுத்துவதை நேரடியாக அவதானிக்கக் கூடியதாக இருக்கிறது. ஒரு கொலை வழக்கில் செய்தி சேகரிப்பதற்காக சென்றிருந்த பொழுது தலைமை பொலிஸ் அதிகாரி சொன்னது ஞாபகம் வருகிறது. இப்படி தமிழர்கள் செய்தால் இங்கிலாந்து அவர்கள் மீது இரக்கம் காட்டாது. உண்மைதான்.

பல தமிழ் இளைஞர்கள் இங்கிலாந்து சிறைகளில் இருக்கிறார்கள். ஆயுள் தண்டனை வழங்கப்பட்ட பலரைப் பார்த்திருக்கிறேன். இன்னும் பதினெட்டு, பதின்ன்று, பத்து வருடங்கள் என்று தீர்ப்பு வழங்கப்பட்ட பல இளைஞர்கள் சிறையில் இருக்கின்றனர். அவர்களின் எதிர்காலம் சிறைக் கம்பிகளுக்குள்ளே முடங்கிப் போய்க் கிடக்கின்றது.

ஒரு தந்தை சொன்னார் ; தம்பி இஞ்சை பொம்பிளைப் பிள்ளையளையோ, ஆம்பிளைப் பிள்ளையளையோ வளர்க்க முடியாது... ஒவ்வொரு நாளும் நடக்கின்ற சம்பவங்களைப் பார்க்கும் போது ஊரோடை போய்விட வேணும்.

உண்மையில் பல பெற்றோர்களுக்கு இந்த எண்ணம் வந்து விட்டது.

கலாச்சாரப் பிறழ்வு, தாய் தந்தையர் உறவுகள் பற்றிய அசட்டை என்று பெரியவர்கள் தாங்க முடியாத அந்தரங்களைச் சுமக்க வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டு விடுகிறார்கள்.

இந்நிலையில், தமிழர்களின் குற்றச் செயல்கள், நடவடிக்கைகள் அகதிகள் விடயத்தில் பல பாதகமான திருப்பங்களை இங்கிலாந்து அரசு எடுப்பதற்கான நிர்ப்பந்தங்களை எதிர்கொள்கிறது. சுதேசிகளாலும் அரசியல் எதிர்ப்புக் காரர்களாலும் இந்த அழுத்தங்கள் அரசாங்கத்துக்கு வருகின்றன. உள்துறை அமைச்சும் குடிவரவு, குடியகல்வு அமைச்சும் இது தொடர்பான அறிக்கைகளை அடிக்கடி மாற்றி மாற்றி தெரிவிக்கும் போது, அகதிகள் தொடர்பான நெருக்குதல்கள் அதிகரிக்கின்றன.

முக்கியமாக அகதிகளின் வேலை செய்யும் அனுமதியை எவ்வித முன்னறிவித்தலுமின்றி அரசாங்கம் பறித்து விடுகிறது. அதனால் அவர்கள் ஜீவனோபாயத்துக்கு மிகவும் கஷ்டப்படுகின்றார்கள்.

அதனோடு NASS எனும் அகதிகளுக்கான உதவும் அமைப்பும் இப்பொழுது கொடுப்பனவுகளை நிறுத்திவிட்டது. அகதிகள் தொடர்பாக வழக்குகளில் வாதாடும் சட்ட நிறுவனங்களுக்கு கொடுத்து வந்த ஒரு தொகைப் பணத்தையும் சில நிறுவனங்களுக்கு நிறுத்திவிட்டது. சில நிறுவனங்களுக்கு குறைத்துவிட்டது.

இந்த நிலையில், அகதிகள் மிகவும் இக்கட்டான நிலைக்குத் தள்ளி அவர்களை இங்கிலாந்தில் இருந்து வலுக்கட்டாயமாகத் திருப்பி தமது நாடுகளுக்கு அனுப்பும் விடயத்தையே அரசும் உள்துறை அமைச்சும் செய்து வருகின்றது.

சில அகதிகள் மாதமொரு முறை அதற்கென அமைக்கப்பட்ட நிலையங்களுக்கு வந்து கையெழுத்திடப் பணிக்கப் பட்டிருக்கிறது. சிலருக்கு வாரமொரு தடவை சிலருக்கு ஒவ்வொரு நாளும், இப்படியான நெருக்குதல்களும் திருப்பி அனுப்புவதிலும் தொடர்ந்த வண்ணமிருக்கும் நிலையில், அகதிகள் அல்லல்பட்டுக் கொண்டிருக்கிறார்கள்.

இலங்கைத் தமிழர்கள் பலரை அரசு கையெழுத்திடக் கூப்பிட்ட தினங்களில் திருப்பி அனுப்பும் சம்பவங்களும் தொடர்ந்த வண்ணமிருக்கின்றன.

ஊடகங்களுக்குத் தெரியாமல், சக நிறுவனங்கள், அகதி உதவி நிலையங்களுக்குத் தெரியாமல் நடைபெறும் சங்கதிகள் இவை.

இந்தப் பிரச்சினைகள் பற்றி அதிக அக்கறை செலுத்த வேண்டிய சமூக அமைப்புகள் இன்னும் பிரசங்கங்களில் மட்டும் வாளாயிருக்க முடியாது. மற்றைய அமைப்புகளில் எவ்வளவு அழகாக பஞ்சாபிகள், குஜராத்திகள், கிறிஸ்தவர்கள் எவ்வளவு அழகாக சமூக கட்டமைப்பை முன் நிறுத்தி வாழ்கிறார்கள். தமிழ், சைவ சமூகக் கட்டமைப்பைச் சீர் செய்ய வேண்டியது ஒவ்வொரு சமூக அமைப்புகள் சங்கங்களினதும் கடமையாகும். தமிழர்கள் தொடர்பான ஒரு சந்தேகமற்ற அரசுக்கு தொந்தரவற்ற ஒரு நிலை வரும் வரைக்கும் தமிழர்கள் மீதான நெருக்குதல்கள் தொடர்ந்து கொண்டே இருக்கும்.

இது இங்கிலாந்திலுள்ள தமிழர் சமூக அமைப்புகள் மற்றும் ஆலயங்களின் கவனத்திற்கு.....

நன்றி உதயன் யாழ்

# இம்மாதம் இப்படித்தான் ஆகஸ்ட் 2004

– கணித்தவர் : ஜோதிட ரத்னா – லயன். டாக்டர். கே.பி. வித்யாகரன்
37, மகாலக்ஷ்மி தெரு, தி.நகர், சென்னை – 17. தொலைபேசி : 2434 8877, 24336465 செல் : 94441 17 1115

## மேடம் : (அஸ்வினி, பரணி, கிருத்திகை 1ம் பாதம்)



தன்மானம் மிக்கவர்களே ! இந்த மாதத்தில் நீங்கள் நினைத்ததெல்லாம் நிறைவேறும். பேச்சில் மிடுக்கு தெரியும். ஆடை அணிகலன்கள் வந்து சேரும். எதிரிகளை வீழ்த்துவீர்கள். கடன் தொல்லை குறையும். பணவரவு சரளமாக இருக்கும். மின் சாதனங்கள், எலக்ட்ரானிக் சாதனங்கள் வாங்குவீர்கள். கணவன் மனைவிக்குள் அன்யோன்யம் அதிகரிக்கும். பணம் கேட்டு நச்சரிக்கும் உறவினர்களின் தொல்லை குறையும். பூர்வீகச் சொத்து வந்து சேரும். ஆரோக்கியமும், அழகும் கூடும். பிள்ளைகளை அழைத்துக் கொண்டு உல்லாசப் பயணம் சென்று வருவீர்கள். வெளிவட்டாரம் இனிக்கும். வியாபாரம் தழைக்கும். பழைய பாக்கிகள் வசூலாகும். புது ஒப்பந்தங்களில் கையெழுத்திடுவீர்கள். புது பங்குதாரர்கள் அதிகமாவார்கள். உத்யோகத்தில் மூத்த அதிகாரி உதவுவார். நல்ல புது வேலையும் கிடைக்கும். சம்பளம் உயரும். கன்னிப் பெண்களுக்கு எதிர்பாராத சுபச்செய்திகள் தேடி வரும்.காதல் இனிக்கும். உயர் கல்வியில் ஏற்றமான சூழல் வரும் மாணவர்களின் பொது அறிவுத்திறன் வளரும். பரிசு பெறுவார்கள். அக்கம் பக்கத்து வீட்டாரின் ஆதரவு பெருகும். வழக்குகள் சாதகமாகும். அரசால் ஆதாயம் உண்டு. புத்துணர்ச்சி பொங்கும் மாதமிது.

சந்திராட்டம தினங்கள் : 23, 24 தேதிகளில் நிதானம் தேவை, அதிர்ஷ்ட எண்கள் : 1, 3 நிறங்கள் : ஆரஞ்சு, ஊதா


## இடபம் : (கிருத்திகை 2, 3, 4ம் பாதம்,ரோகினி, மிருகசீரிடம் 1, 2ம் பாதங்கள்)



கொடுத்த காரியத்தை முடிப்பதில் வல்லவர்களே ! தட்டிப் போன காரியங்கள் உடனே நடக்கும். வாக்குவாதங்கள் தம்பதிகளுக்குள் விலகும். மன உளைச்சல், தாழ்வு மனப்பான்மை தீரும். பண வரவு அதிகரிக்கும். குடும்பத்தில் கலகலப்பான சூழல் உருவாகும். வேலை கிடைக்கும். கல்யாணப் பேச்சு வார்த்தையிலிருந்த முட்டுக்கட்டைகள் விலகும். ஆடை, அணிகலன்கள் சேரும். ஷேர், ஸ்பெகுலேஷன், லாட்டரியில் பணம் வரும். உறவினர்களிடையே பழைய விரோதம் விலகும். விருந்தினர் வருகை கூடும். வாகனம், வீடு பராமரிப்புச் செலவுகள் அதிகரிக்கும். பழைய கடன் பிரச்சனைகளிலிருந்து கொஞ்சம் கொஞ்சமாக விடுபடுவீர்கள். அரசாங்கத்தால் ஆதாயம் உண்டு. வேற்று மதத்தினர் உதவுவார்கள். சகோதர சகோதரிகள் உங்களைப் புரிந்து கொள்வார்கள். சந்தேக மனப்பான்மை இனி இருக்காது. வெளி வட்டாரத்தில் உங்கள் மீது சுமத்தப்பட்டிருந்த வீண் பழி விலகும். நல்ல பதவிகள் தேடி வரும். வியாபாரத்தில் வேலையாட்கள் ஒத்துழைப்பார்கள். நெருக்கடிகள் விலகும். லாபம் அதிகரிக்கும். உத்யோகத்தில் உங்களின் பேச்சுக்கு மரியாதை கூடும். கன்னிப் பெண்களுக்கு திருமணம் சிறப்பாக நடக்கும். மாணவர்களின் யூகிக்கும் அறிவு கூடும். சாதிக்கும் மாதமிது.

சந்திராட்டம தினங்கள் : 25, 26 தேதிகளில் கவனம் தேவை, அதிர்ஷ்ட எண்கள் : 3, 9 நிறங்கள் : ரோஸ், வெள்ளை

## மிதுனம் : ( மிருகசீரிடம் 3, 4ம் பாதம், திருவாதிரை, புனர்பூசம் 1, 2, 3ம் பாதங்கள்)



சுறுசுறுப்பானவர்களே! உங்கள் ராசியிலேயே அமர்ந்திருக்கும் சுக்கிரன் வசதி, வாய்ப்புகளை பெருக்குவார். மாதத்தின் பிற்பகுதியில் வலுவடையும். சூரியனாலும் குடும்ப வருமானம் உயரும். தொடர்ந்து ஜன்மச்சனியும் இருப்பதால் உடல் நலம் பாதிக்கும். தூக்கமின்மை, அலைச்சல், மன உளைச்சல் வந்து போகும். எதிர்பாராத திடீர்ப் பயணங்களும் உண்டு. கணவன் மனைவி உறவு மேம்படும். உறவினர்களால் வீண் செலவுகள் அதிகரிக்கும். சுப காரியங்களில் கலந்து கொள்வீர்கள். சளித் தொந்தரவு, உடல் அசதி, ஞாபக மறதி வந்து போகும். குல தெய்வப் பிரார்த்தனைகள் நிறைவேறும். வாகனப் பழுது நீங்கும். பிள்ளைகளின் உயர் கல்விக்காகப் போராடுவீர்கள். அவர்களின் நடவடிக்கைகளை கண்காணிப்பது நல்லது. வெளி வட்டாரத்தில் மதிக்கப்படுவீர்கள். வியாபாரத்தில் பணவரவு அதிகரிக்கும். பழைய பாக்கிகள் வசூலாகும். புது முதலீடு செய்வீர்கள். வேலையாட்களிடம் வியாபார ரகசியங்களைச் சொல்ல வேண்டாம். உத்யோகத்தில் வேலைப்பளு குறையும். அதிகாரி உதவுவார். கன்னிப் பெண்களுக்கு புது நண்பர்களின் ஆதரவு அதிகரிக்கும். மாணவர்களின் மொழித் திறன் கூடும். கலைஞர்களுக்கு நல்ல வாய்ப்புகள் வரும். தடைகளைத் தாண்டி முன்னேறும் மாதமிது.

சந்திராட்டம தினங்கள்: 1ந்தேதி மற்றும் 27, 28 தேதிகளில் நிதானம் தேவை, அதிர்ஷ்ட எண்கள் : 1, 5 நிறங்கள் : கிரே, கிளிப்பச்சை

## கடகம் : (புனர்பூசம் 4ம் பாதம், பூசம், ஆயிலியம்)



இராஜ தந்திரிகளே ! சுக்ரனால் உல்லாசப் பயணங்கள் செல்வீர்கள். புது நண்பர்கள் அறிமுகமாவார்கள். செலவினங்கள் அதிகரிக்கும். முன் கோபம் வந்து போகும். ஆடை, ஆபரணங்கள் வாங்குவீர்கள். கணவன், மனைவி உறவு சுமாராக இருக்கும். தேவையில்லாமல் பழைய விஷயங்களைத் தோண்டிக் கொண்டிருக்க வேண்டாம். உறவினர்கள், நண்பர்களால் கொஞ்சம் அலைச்சல் ஏற்படும். யாருக்காகவும் ஜாமீன், காரெண்டர் கையெழுத்திட வேண்டாம். வீடு, மனை வாங்குவீர்கள். பல போராட்டங்களுக்கிடையே கட்டி முடித்து விடுவீர்கள். குடி புகுவீர்கள். ரத்தினங்கள் வந்து சேரும். பல்வலி, கழுத்துவலி வந்து போகும். புண்ணிய ஸ்தலங்கள் சென்று வருவீர்கள். அம்மாவின் உடல்நலம் பாதிக்கும். அக்கம் பக்கம் வீட்டாருடன் அதிகம் பேச வேண்டாம். விலையுயர்ந்த பொருட்களைக் கவனமாகக் கையாளுவது நல்லது. வியாபாரம் ஓரளவு லாபம் தரும். கூட்டுத் தொழில் தவிர்க்கவும். அளவுக்கதிகமாக முதலீடு செய்ய வேண்டாம். உத்யோகத்தில் மேலதிகாரிகளை அனுசரித்துப் போவது நல்லது. வேலைப் பளு அதிகரிக்கும். கன்னிப் பெண்கள் புது முடிவு எடுப்பார்கள். வேலை கிடைக்கும். கலைஞர்கள் வதந்திகளிலிருந்து விடுபடுவார்கள். மாணவர்களின் நட்பு வட்டம் விரியும். செலவுகள் கூடும் மாதமிது.

சந்திராட்டம தினங்கள் : 2, 3, 29ந்தேதி மாலை முதல் 30, 31ந்தேதி நண்பகல் வரை நிதானம் தேவை, அதிர்ஷ்ட எண்கள் : 3, 1 நிறங்கள் : ப்ரௌன், ஆரஞ்சு

## சிம்மம் : (மகம், பூரம், உத்திரம் 1ம் பாதம்)



கலையுணர்வு உள்ளவர்களே ! உங்கள் ராசியிலேயே நெருப்பு கிரகம் நிற்பதால் உடல்நலத்தில் கூடுதல் கவனம் செலுத்துங்கள். சுக்ரன் வலுவாக இருப்பதால் சொத்து சேரும். உடல் நலம் சீராகும். சகோதர சகோதரிகளால் மன ஆறுதல் உண்டு. வருமானம் அதிகரிக்கும். அரசு காரியங்கள் உடனே முடியும். எதிர்பார்த்தஉதவிகள் வி.ஐ.பிக்களிடமிருந்து

கிடைக்கும். பேச்சுத்திறமை கூடும். கணவன் மனைவி உறவு மேம்படும். ஆடை, அணி, மணிகள் வந்து சேரும். எதிர்பார்த்த பணம் வரும். மன நிம்மதி கிடைக்கும். உங்களின் நீண்ட நாள் எண்ணங்களெல்லாம் நிறைவேறும். வெளி வட்டாரத்தில் மதிக்கப்படுவீர்கள். வியாபாரத்தில் ஆர்வம் அதிகரிக்கும். போட்டிகள் குறையும். ஏற்றுமதி இறக்குமதி வகைகள் லாபம் தரும். பங்குதாரர்களிடையே ஒற்றுமை உண்டாகும். உத்யோகத்தில் உங்களின் எதிரிகள் வீழ்த்தப்படுவார்கள். புது வாய்ப்புகள் கிடைக்கும். சம்பளம் கூடும். மேலதிகாரிகளின் ஒத்துழைப்பு முழுமையாக கிட்டும். கன்னிப் பெண்கள் இனி மந்தமாக இல்லாமல் சுறுசுறுப்பாக செயல்படுவார்கள். காதல் கனியும். கலைஞர்களின் வசதி பெருகும். மாணவர்கள் கலைகளில் தேர்ச்சி பெறுவர். மறுமலர்ச்சி தொடங்கும் மாதமிது.

சந்திராட்டம தினங்கள்: 4, 5, 6ந்தேதி காலை 10 மணிவரை நிதானம் தேவை, அதிர்ஷ்ட எண்கள் : 6, 9 நிறங்கள் : வெள்ளை, சிவப்பு

## கன்னி : (உத்திரம் 2, 3, 4ம் பாதம், அஸ்தம், சித்திரை 1, 2ம் பாதங்கள்



கடமையுணர்வு கொண்டவர்களே ! உங்கள் ராசிக்கு எட்டில் ராகுவும், இரண்டில் நிற்கும் கேதுவும் எந்த வேலையிலும் இழுபறியை ஏற்படுத்துவதுடன் அலைச்சலையும், வீண் விரையங்களையும் ஏற்படுத்தும். சனியும், புதனும் வலுவாக நிற்பதால் உங்களின் பணவரவு கூடும். கோபத்தை அடக்குவீர்கள். கணவன் மனைவிக்குள் சண்டை, சச்சரவுகள் குறையும். திருமணம், கிரகப்பிரவேசமென முக்கிய காரியங்களில் அதிகம் செலவு செய்வீர்கள். புது திட்டங்கள் தீட்டுவீர்கள். மீடியேட்டர், புரோக்கர், ஏஜென்ஸி வகைகளால் வருமானம் வரும். பிள்ளைகளின் ஆரோக்யம், கல்வியில் நல்ல முன்னேற்றம் உண்டு. புண்ணிய ஸ்தலங்கள் சென்று வருவீர்கள். வழக்குகள் சாதகமாகும். லாட்டரி, ஷேர் லாபம் தரும். வி.ஐ.பிக்கள் அறிமுகமாவார்கள். வெளி வட்டாரம் ஆதரவு தரும். உறவினர்களை விட நண்பர்கள் மத்தியில் செல்வாக்கு கூடும். வியாபாரத்தில் வேற்று மதத்தினர் மூலமாக லாபம் வரும். எலக்ட்ரானிக்ஸ், ரசாயண, இரும்பு வகைகள் ஆதாயம் தரும். புது வாடிக்கையாளர்கள் அறிமுகமாவார்கள். உத்யோகத்தில் கெடுபிடிகள் அதிகரித்தாலும் சாமர்த்தியமாக வெல்வீர்கள். கன்னிப் பெண்களின் உயர்கல்வியில் வெற்றி உண்டு. மாணவர்களின் நினைவாற்றல் கூடும். வெற்றிகள் தொடங்கும் நேரமிது.

சந்திராட்டம தினங்கள்: 6ந்தேதி காலை மணி 10 முதல் 7, 8ந் தேதி இரவு மணி 7 வரை கவனம் தேவை, அதிர்ஷ்ட எண்கள் : 5, 6 நிறங்கள் : ரோஸ், வெள்ளை

## துலாம் : (சித்திரை 3, 4ம் பாதம், ஸ்வாதி, விசாகம் 1, 2, 3ம் பாதங்கள்



துயரம் கண்டு துவளாதவர்களே ! உங்கள் ராசிநாதன் வலுவாக நிற்பதால் மனோபலம் கூடும். குடும்பத்தில் மகிழ்ச்சியான சம்பவங்கள் நடக்கும். பணம் வரும். வழக்குகள் சாதகமாகும். எதிரிகளை வெற்றி காண்பீர்கள். தள்ளிப்போன பல காரியங்கள் உடனே முடியும். எல்லோரும் மதிப்பார்கள். பிள்ளைகளின் ஒத்துழைப்பு அதிகரிக்கும். அரசால், தலைவர்ளால் ஆதாயம் உண்டு. உறவினர்களிடமிருந்த கசப்புணர்வு விலகும். புது நண்பர்கள் கிடைப்பார்கள். விலையுயர்ந்த பொருட்கள் வந்து சேரும். மகான்களின் ஆசி கிடைக்கும். வியாபாரத்தில் திடீர் லாபம் கிடைக்கும். புது வியாபாரம் தொடங்குவீர்கள். அனுபவம் வாய்ந்த வேலையாட்கள் வந்து சேர்வார்கள். கொடுக்கல், வாங்கலில் சொன்ன சொல்லை நிறைவேற்றுவீர்கள். கூட்டுத் தொழில் லாபம் தரும். உத்யோகத்தில் புதுமுடிவுகள் எடுப்பீர்கள். மறைமுக எதிர்ப்புகள் மங்கும். தலைமைக்கு நெருக்கமாவீர்கள். சம்பளப் பாக்கி கைக்கு வரும். கன்னிப் பெண்களுக்கு உத்யோகம் கிடைக்கும். காதல் கனியும். கலைஞர்களுக்கு தட்டிப் போன வாய்ப்புகள் தேடிவரும். மாணவர்களின் பகுத்தறிவுத்திறன் கூடும். பரிசும் கிட்டும். கனவுகள் நனவாகும் காலமிது.

சந்திராட்டம தினங்கள்: 8ந்தேதி இரவு மணி 7முதல் 9, 10 தேதிகளில் கவனம் தேவை, அதிர்ஷ்ட எண்கள் : 1, 5 நிறங்கள் : மெரூன், கிரே

## விருச்சிகம் : (விருச்சிகம் 4ம் பாதம், அனுஷம், கேட்டை)



நடுநிலையானவர்களே ! சூரியனின் பலம் பதினோராந் தேதி முதல் அதிகரிப்பதால் காரியத்தடைகள் விலகும். ஏளனமாய் பார்த்தவர்களெல்லாம் இனி உங்களின் அசுர வளர்ச்சியைக் கண்டு அதிசயமாகப் பார்ப்பார்கள். கோபம் தணியும். தெய்வப் பிரார்த்தனைகளை நிறைவேற்றுவதில் இருந்த தடைகள் விலகும். கணவன் மனைவி உறவு இனிக்கும். சந்தேக மனசு தீரும். உறவினர்களால் ஏற்பட்ட கலகம் தீரும். பிள்ளைகளின் உயர்கல்வி முயற்சிகள் வெற்றி அடையும். பழைய கடனொன்று தீரும். சகோதர வகையில் உதவி கிடைக்கும். வீடு, மனை வாங்குவது, விற்பதிலிருந்த வீண் தடைகள் விலகும். தோல்வி மனப்பான்மை நீங்கும். உத்யோகத்தில் உங்கள் கை ஓங்கும். தடைபட்டிருந்த சம்பள உயர்வு, பதவி உயர்வெல்லாம் இனி கிடைக்கும். மொட்டைக் கடுதாசி, மெம்மோவெல்லாம் இனி வராது. வியாபாரத்தில் இனி உங்கள் கணக்கு தப்பாது. ஷேரும் லாபம் தரும். கூட்டுத் தொழில் லாபம் தரும். கன்னிப் பெண்களின் கல்யாணத் தடை விலகும். வேலை கிடைக்கும். கலைஞர்கள் கௌரவிக்கப்படுவார்கள். மாணவர்கள் மதிக்கப்படுவார்கள். புது வசந்தம் பூக்கும் மாதமிது.

சந்திராட்டம தினங்கள்: 11, 12, 13ந்தேதி மாலை 6.40 வரை கவனம் தேவை, அதிர்ஷ்ட எண்கள் : 1, 4 நிறங்கள் : ஆரஞ்சு, வெள்ளை

## தனுசு : (மூலம், பூராடம், உத்திராடம் 1ம் பாதம்)



தயாள மனசு உள்ளவர்களே ! ஞானக்காரகன் கேது வலுவாக இருப்பதால் மனதிலும், செயலிலும் யதார்த்தம் தெரியும். தத்துவம் பேசி சில காரியங்களை சாதிப்பீர்கள். கணவன் மனைவிக்குள் விட்டுக் கொடுத்துப்போவது நல்லது. புதன் வலுவாக இருப்பதால் உங்களின் பழைய நண்பர்கள் மூலம் சில உதவிகள் கிடைக்கும். தாமதமாக பணம் வந்து சேரும். இந்த மாதத்தின் பிற்பகுதியில் பணவரவு அதிகரிக்கும். யாருக்காவும் காரெண்டர் கையெழுத்திட வேண்டாம். வாகன விபத்து வரக்கூடும். கவனம் தேவை. இரவு நேரப் பயணத்தைத் தவிர்க்கவும். தலைசுற்றல், தொண்டைவலி வந்து போகும். அக்கம் பக்கம் வீட்டார் உதவுவார்கள். வெளிவட்டாரம் மகிழ்ச்சி தரும். வியாபாரத்தில் மறைமுக எதிர்ப்புகள் போட்டிகளை வெல்வீர்கள். ஏஜென்ஸி, மருந்து, பெட்ரோ கெமிக்கல் வகைகள் லாபம் தரும். கூட்டுத் தொழிலில் அதிக முதலீடு வேண்டாம். உத்யோகத்தில் உங்களுக்கு செல்வாக்கு கூடும். அதிகாரிகளைப் பற்றி அவதூறாகப் பேசவேண்டாம். முக்கிய ஆவணங்களை கவனமாகக் கையாளுங்கள். கன்னிப் பெண்களுக்கு மாதத்தின் பிற்பகுதியில் நல்ல செய்தி தேடி வரும். கலைஞர்கள் முன்கோபம் தவிர்ப்பது நல்லது. முற்பகுதி கசந்து பிற்பகுதி இனிக்கும் மாதமிது.

சந்திராட்டம தினங்கள்: 13ந்தேதி மாலை 6.30 மணிமுதல் 14, 15ந் தேதிவரை கவனம் தேவை, அதிர்ஷ்ட எண்கள் : 5, 6 நிறங்கள் : பிங்க், வெள்ளை

**மகரம்** : உத்திராடம் 2, 3, 4ம் பாதம், திருவோணம், அவிட்டம் 1, 2ம் பாதங்கள்)



மனம் தளராதவர்களே! நீங்கள் ஒரு அர்த்தத்தில் பேச மற்றவர்கள் வேறு விதமாகப் புரிந்து கொள்வார்கள். அனாவசியமாக அடுத்தவர்களின் விவகாரங்களில் தலையிட வேண்டாம். அலைச்சலும், விரையச் செலவுகளும், பயணங்களும் அதிகரிக்கும். கணவன் மனைவி உறவு சுமாராக இருக்கும். நீண்ட நாள் பிரார்த்தனைகள் நிறைவேறும். கல்யாணப் பேச்சு வார்த்தைகள் சுமுகமாக முடியும். பிள்ளைகளின் போக்கு மாறும். லாட்டரி, ஷேர் லாபம் தரும். பத்தொன்பதாம் தேதி முதல் குருவின் பார்வை உங்கள் ராசி படர்வதால் அழகு, ஆரோக்யம் கூடும். எதிர்ப்புகள் அடங்கும். வரவேண்டிய பணம் வந்து சேரும். வெளிவட்டாரத்தில் மதிப்பு கூடும். சகோதர வகையில் அலைச்சல் ஏற்படும். பழைய கடன் பிரச்சனையொன்று சுமுகமாக முடியும். வியாபாரத்தில் புதிய முதலீடுகள் செய்யலாம். உணவு, பிளாஸ்டிக், ஸ்டேஷனரி வகைகள் லாபம் தரும். கூட்டுத் தொழிலில் சிக்கல் வந்து சேரும். உத்யோகத்தில் மறைமுக எதிர்ப்புகள் மறையும். அதிகாரிகளின் அன்பைப் பெறுவீர்கள். கலைஞர்களுக்கு வருமானம் உயரும். மாணவர்களுக்கு உயர்கல்வியில் சேர நல்ல நிறுவனத்தில் இடம் கிடைக்கும். கன்னிப் பெண்களுக்கு குழப்பம் வந்து போகும். ஓரளவு முன்னேறும் மாதமிது.

சந்திராட்டம தினங்கள்: 16, 17, 18ந்தேதி காலை 11 மணி 15 நிமிடம் வரை நிதானம் தேவை, அதிர்ஷ்ட எண்கள் : 5, 8 நிறங்கள் : கிரே, நீலம்

**கும்பம்** : (அவிட்டம் 3, 4ம் பாதம், சதயம், பூரட்டாதி 1, 2, 3ம் பாதங்கள்)



கொடையாளிகளே ! சுக்ரபலம் சிறப்பாக இருப்பதால் உங்களின் முகம் மலரும். நிலைமை சாதகமாகும். கணவன் மனைவி உறவு இனிக்கும். செவ்வாய் ஏழில் நிற்பதால் உஷ்ணத்தால், அலர்ஜியால் உடல்நலம் பாதிக்கும். மனைவிக்கு சில விபத்துகள், நெருப்பு காயங்கள் ஏற்படக்கூடும். எனவே கவனம் தேவை. பிள்ளைகளின் தேவைகளைப் பூர்த்தி செய்வீர்கள். உல்லாசப் பயணங்கள் சென்று வருவீர்கள். ஆன்மீக குரு ஒருவரை சந்திப்பீர்கள். சகோதரரால் அலைச்சல் ஏற்படும். வாகனத்தில் செல்லும்போது கவனம் தேவை. அரசால் ஆதாயம் உண்டு. வெளிவட்டாரம் உங்களைக்கண்டு மதிக்கும். வியாபாரத்தில் பற்று வரவு சுமாராக இருக்கும். புது முதலீடுகள் தவிர்க்கவும். யாருக்கும் அதிக கடன் தரவேண்டாம். போட்டிகள் அதிகரிக்கும். வேலையாட்களாலும் பிரச்சனைகள் வந்து போகும். உத்யோகத்தில் உங்களுக்கு ஆதரவாக அதிகாரிகள் செயல்பட்டாலும், சக ஊழியர்களை சரிசெய்து கொள்ளுங்கள். சம்பளப் பிரச்சனை தீரும். வீடு மாறுவீர்கள். வாகனம் வாங்குவீர்கள். கன்னிப் பெண்களுக்கு குழப்பங்கள் தீரும். நல்ல முடிவெடுப்பீர்கள். கலைஞர்களுக்கு உற்சாகம் பொங்கும். மாணவர்கள் தேர்ச்சி பெறுவார்கள். நல்ல மாறுதல்கள் நிகழும் காலமிது.

சந்திராட்டம தினங்கள்: 18ந்தேதி காலை 11.15லிருந்து 19, 20ந்தேதிஇரவு 7 மணிவரை நிதானம் தேவை, அதிர்ஷ்ட எண்கள் : 3, 4 நிறங்கள் : மஞ்சள், வெளிர்நீலம்

**மீனம்** : (பூரட்டாதி 4ம் பாதம், உத்திரட்டாதி, ரேவதி)



மேன்மையாக சிந்திப்பவர்களே ! புதுத் திட்டங்கள் தீட்டுவீர்கள். கணவன் மனைவிக்குள் நெருக்கம் அதிகமாகும். சண்டை, சச்சரவு விலகும். வீண் வாக்குவாதம் இருக்காது. தாம்பத்யம் இனிக்கும். கசப்புணர்வு உறவினர்களிடையே மறையும். உங்களின் வெள்ளை மனசை இனி அனைவரும் புரிந்து கொள்வார்கள். பிள்ளைகளின் கல்வியில் முன்னேற்றம் உண்டு. கல்யாணப் பேச்சு வார்த்தை சுமூகமாக முடியும். வீட்டில் மங்கள காரியம் நடக்கும். வாகனம் வாங்குவீர்கள். அம்மாவின் உடல்நலம் சீராகும். சகோதரர் உதவுவார். வீடு, மனையிலிருந்த வில்லங்கம் விலகும். வழக்கில் வெற்றி உண்டாகும். வெளிவட்டாரம் வியக்கும். பதவிகள் தேடி வரும். உத்யோகத்தில் தடைபட்ட பதவி உயர்வு, சம்பள உயர்வு தேடி வரும். புது வேலை கிடைக்கும். வியாபாரத்தை அபிவிருத்தி செய்வீர்கள். பற்றுவரவு உயரும். பழைய பாக்கிகள் வசூலாகும். போட்டிகள் குறையும். வாடிக்கையாளர் கூட்டம் அதிகரிக்கும். கன்னிப்பெண்களின் கவலைகள் விலகும். மாணவர்களின் உயர்கல்வியில் தேர்ச்சி கிட்டும். கலைஞர்களுக்கு நல்ல வாய்ப்புகள் உண்டு. சவால்களை சமாளித்து சாதிக்கும் நேரமிது.

சந்திராட்டம தினங்கள்: 20ந்தேதி இரவு 7 மணி முதல்21, 22ந்தேதிகளில் எதிலும் நிதானம் தேவை, அதிர்ஷ்ட எண்கள் : 1, 9 நிறங்கள் : மெரூன், வெளிர் சிவப்பு

## சீலர்

*ஒழுக்கசீலராய் வாழ்ந்துவிட்டால் உலகம் எமை வணங்கும்*
*உத்தமர் என்ற நற்பெயரும் தானாய்க் கிடைத்துவிடும்*
*நல்லவராக வாழ்வோம் நானிலம் போற்றிட வாழ்வோம்*
*வல்லவராக வாழ்வோம் வள்ளுவன் வழியினில் வாழ்வோம்*
*நல்லதை நினைத்து நல்லதைப் பேசி நல்லதைச் செய்திடுவோம்*
*உள்ளதைச் சொல்லி உதவிகள் செய்யும் பண்பை வளர்த்திடுவோம்*
*வறுமையில் நாங்கள் வாடியபோதும் வாய்மை மறப்பதில்லை*
*வாழ்ந்து காட்டியே மனிதர்களாவோம் வஞ்சனை ஏதும் இல்லை*
*நல்லவராக வாழ்வோம் நானிலம் போற்றிட வாழ்வோம்*
*வல்லவராக வாழ்வோம் வள்ளுவன் வழியினில் வாழ்வோம்*

இரா. தெய்வராஜன்

## எதிர்நீச்சல்

மூடநம்பிக்கைகளை
பகுத்தறியாமல்
பின்பற்றியதாலேயே
உழைப்பாளி அடிமையாகவும்
சோம்பேறி ஆண்டானாகவுமட்
இருக்கும் நிலை வந்தது

– சூரியதீபன்

# வெருவந்த செய்யாமை

ஆட்சியில் அமர்ந்து சட்டத்தின் வழியில் – அதன் அடிச்சுவட்டில் நிர்வாகம் இயற்றிப் புகழ் பெற்றவருண்டு. அவர்களிடம் நிர்வாகத் திறமையும், கடமையுணர்வும் நிரம்பி இருந்திருக்கின்றன. ஆனால் மக்கள் மனதில் இடம்பெற்றுப் பெரும் புகழ் பெற்றிருக்கவில்லை. அதற்கு அப்பால் சட்டத்தின் முறைமையினின்று பிறழ்ந்து போகாமல், மனிதாபிமானத்தை முன்நிறுத்தி ஆட்சிசெய்தவர்கள் மக்களின் மனதில் நீங்காத இடத்தினைப் பெற்றிருக்கிறார்கள். அப்படி நினைவில் நிற்பவர்களில் ஆபிரகாம் லிங்கன் என்ற புகழ்பெற்ற ஜனாதிபதி முதன்மையானவர்.

அவருடைய காலத்தில் ' வில்லியம் ஸ்காட் ' என்ற இராணுவச் சிப்பாய் இருந்தான். அவன் கடமை தவறாத வீரன். அவனுடன் பணியாற்றிய இராணுவச் சிப்பாய் ஒருவனுக்கு உடல்நலமின்மையால் கடமைக்குச் செல்ல முடியாத நிலை வந்தபோது, இவனே அவனது காவல் கடமையை முன்வந்து மேற்கொண்டான். அதற்கு அடுத்த நாள் இவனுடைய கடமை நாள், ஆகவே அன்றும் இவன் விழித்திருக்க வேண்டும். தன்னுடைய தலைமை அதிகாரியிடம் போனான். இரண்டு வேளையும் தொடர்ந்து காவல் செய்வதால் சிலவேளை கடமை நேரத்தில் கண்ணயர்ந்துவிட நேரலாம். ஆகவே அன்று மாத்திரம் ஓய்வுதருமாறு கேட்டுக் கொண்டான். அவனுடைய அதிகாரி மிகவும் கண்டிப்பானவர். அதை ஏற்க மறுத்துவிட்டார். வேறுவழியின்றி தொடர்ந்து இரு நாட்கள் இவன் கடமையாற்ற வேண்டி வந்தது. அந்தக் கடமையில் அவன் இருந்தபோது சிறிது கண்ணயர நேர்ந்தது. அந்நேரம் இவனது மேலதிகாரி பார்த்து விட்டான். அவன் தன்மேல் பணியாற்றும் உயர் அதிகாரிக்கு அறிவித்துவிட்டான். யுத்த காலத்தில் தூங்கிய வீரனுக்கு மரண தண்டனை கொடுப்பதுதான் அன்றைய வழக்கம். இவனுக்கும் இவனது மேலிடத்தில் இருந்து அதே தீர்ப்புத்தான் கிடைத்தது.

அவனது சகாக்கள் அவனுக்காக அந்த அதிகாரியிடம் மன்றாடிப்பார்த்தார்கள். வழங்கப்பட்ட தண்டனையை மாற்றும் அதிகாரம் இனி ஜனாதிபதிக்கு மாத்திரமே உண்டென்று சொல்லப்பட்டுவிட்டது. அவனுடைய நண்பர்கள் அவனுக்காக கருணை மனுவொன்றைத் தயார்செய்து அன்றைய அமெரிக்க ஜனாதிபதி ஆபிரகாம் லிங்கனுக்கு அனுப்பிவைத்தார்கள். அந்த மனுவையும் அதன் காரணத்தையும் ஜனாதிபதி ஆராய்ந்தார். எவருக்கும் தெரியாமல் அவனது ஊர், பெற்ற தாய், படித்த பாடசாலை எல்லாவற்றிலிருந்தும் விபரங்கள் தேடிக்கொண்டார். அவனை நேரில் போய்ப் பார்த்தார். அவனைப் பார்த்து '' உன் தாயாரைத் துக்கத்தில் ஆழ்த்தாதே '' ! என்றார். அவன் வெறுமையாகச் சிரித்தான். தன்முன் நிற்பது ஜனாதிபதி என்பதை அவன் அறியான். '' நான்தான் நாளை சுட்டுக்கொல்லப்படும் சிப்பாய் ஆயிற்றே '' என்றான். '' நீ நாளைக்குச் சாகப்போவதில்லை ! உன் கடமைக்குத் திரும்பப்போகிறாய், நிச்சயமாகச் சொல்கிறேன் '' என்றார். அவனைப்பார்த்து மீண்டும் தொடர்ந்தார் ; '' இதை உனக்குச் சொல்பவர் உன் ஜனாதிபதி, நம்பமாட்டாயா ? '' என்றார். அவன் விக்கித்துப் போனான். '' நான் பிரயாணம் செய்துவந்த செலவை நீதான் வழங்க வேண்டும் கொடுக்க முடியுமா? '' எனக் கேட்டார். அவன் சொன்னான்; '' ஐயா ! என்னிடம் சேமிப்புக் கணக்கில் சிறது பணம் உண்டு. என் நிலத்தின் பேரிலும், நண்பர்களிடமும் கடன் வாங்கமுடியும். உங்களுக்கு உரியதை நிச்சயம் தந்துவிடுவேன் என்னை நம்புங்கள் '' என்றான். அவன் தோள்களைப் பற்றி அந்த ஜனாதிபதி சொன்னார்; '' ஸ்காட் ! உனது வங்கிச் சேமிப்பும், நிலத்தின்பேரில் வாங்கும் கடனும், நண்பர்கள் தரும் தொகையும் என்னுடைய செலவைச் சரிசெய்யாது. ஸ்காட் என்கிற இராணுவ வீரனால் நாட்டிற்குத் தன் கடமையைத் தொடர்ந்து செய்வதால் மாத்திரமே சரிக்கட்டமுடியும் '' என்றார். ஸ்காட் அவர்முன் மண்டியிட்டுக் கண்ணீருடன் சொன்னான் ; '' ஐயா ! அப்படியே செய்வேன்'' என்று. மறுநாட்காலை பத்திரிகைகளில் முன்பக்கச்செய்தி இப்படி வந்தது.

'' ஒரு சாதாரண இராணுவ வீரனுக்கு ஜனாதிபதி நேரில் சென்று மன்னிப்பு வழங்கினார் ''

1967இல் பேரறிஞர் அண்ணா அவர்கள் தமிழகத்தின் முதல் அமைச்சராகப் பணி ஏற்றிருந்த நேரம், சென்னை குப்பப் பகுதியில் விசச்சாராயம் அருந்தி ஐம்பத்துஏழு பேர் அவலமான நிலையில் சென்னை மருத்துவமனையில் அனுமதிக்கப் பட்டிருந்தார்கள். ஆஸ்பத்திரி முழுதும் அழுகுரலும் பொலிசாரின் கெடுபிடியுமாக அல்லோலகல்லோலப்பட்டிருந்தது. அண்ணா அவர்கள் எவரும் எதிர்பாராத வேளையில் அங்கு தோன்றினார். அவரைக்கண்டதும் பொலிஸ் கமிஷனர் திடுக்கிட்டுப் போனார். அவரை நோக்கி வந்த கமிஷனரைப் பார்த்து அண்ணா, சற்றுக் கடுமையாக, '' பொலிஸ் இங்கே என்ன செய்துகொண்டிருக்கிறது. தயவுசெய்து அவர்களை மருத்துவமனையிலிருந்து வெளியேறச் சொல்லுங்கள் ! உடனடியாகச் செய்யுங்கள் '' என்றார். கமிஷனர் ஏதோ சொல்ல வாயெடுத்தபோது, அவரை இடைமறித்த அண்ணா, தன் கைகளால் சைகை காட்டி உடனடியாக வெளியேற்றுமாறு கேட்டுக்கொண்டார். பொலிசார் வெளியேற்றப்பட்டனர். உள்ளேபோன அண்ணா, கட்டிலிலும், தரையிலுமாக உயிருக்கு மன்றாடிக் கொண்டிருந்த மக்களைக்கண்டு இரக்கத்துடன் ஆறுதல் சொன்னார். சிலர் அவரைத் தொட்டு வணங்கி '' ஐயா இனி இப்படிச் செய்யமாட்டேன் சத்தியமாக நம்புங்கள் '' எனக் கழிவிரக்கப்பட்டனர். அண்ணா அவர்களுக்கு ஆறுதல் சொன்னார். சிரித்துக்கொண்டே உற்சாகப்படுத்திவிட்டுத் திரும்பினார். தன்னைத் தொடர்ந்து வந்த பொலிஸ் கமிஷனரை அனுதாபத்துடன் நோக்கிய அண்ணா, தன் செயலுக்காக அவரிடம் மன்னிப்புக்கேட்டுக் கொண்டார். '' இப்போது அவர்கள் உயிருக்கு மன்றாடிக் கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கு ஆறுதல்தான் இப்போது தேவை. அதற்கு அப்புறம் வாக்குமூலங்களைப் பதிவுச் செய்து கொள்ளலாம். உங்கள் கடமையில் தலையிட்டமை குறித்து மனம் வருந்துகிறேன். சட்டத்தை முந்திய மனிதாபிமானம்தான் இப்போது கட்டாயமாகத் தேவைப்படுகிறது. பாதிக்கப் பட்டவனுக்கு அவன் தவறுகள் உணர்த்தப்பட வேண்டும். அதன்பின் அதற்கான தண்டனையை வழங்கவேண்டும். அதுவும் மனிதாபிமானமாக இல்லையா ? '' என்றார் கண்களைச் சிமிட்டியபடியே. அவர்தான் ஆட்சியின் தலைவரான அண்ணா

வள்ளுவர் இதையே இப்படிச் சொல்லிவைத்திருக்கிறார்!

'' தக்காங்கு நாடித் தலைச்செல்லா வண்ணத்தால்
ஒத்தாங்கு ஒறுப்பது வேந்து '' – (குறள் 561)

– கோத்திரன்

Meenakshi

KOLAM

Kaveri
HANDLOOM SAREES

Mandira
COLLECTION

ANURAGA

Gayatri

NAKSHATRA
Pure Kancheepuram Silk Sarees

TRANIKA
CREPE SAREES


RmKV
முகூர்த்தப் பட்டுகள்

Gomathi

தூய காஞ்சிபுரம்,
பனாரஸ், மைசூர்சில்க்ஸ்
கிடைக்குமிடம்

# வர்ணஜாலம் எங்கே!

## அடுத்த இதழில்...


MITHUS
Jewellery
322-324 London Road Croydon CRO 2TJ Tel : 020 8683 1756 Fax : 020 8683 1792
DIAMONDS
Palace
76 Tooting High Street London SW17 ORN Tel : 020 8767 5333 Fax : 020 8767 5814